பான் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4042

திராவிடநாடு

லர் 13 | 3—10—54 | இதழ் 14

அவர் ஒரு 'வானவில்'

"இடிந்துபோன கோட்டை கொத் தளங்களைக் காண்கிறேன்! அவை ளின் மடியில் அலங்காரமாக வீற் றிருந்து அரசோச்சி மடிந்துபோன ன்னுதி மனனர்களின் கவனம் வரு றது எனக்கு. இலக்கியச் சோலைக் குள் நுழைகிறேன்! வீரங் ாட்டும் புறமும், காதல் தேனூட்டும் அகமும், காப் யங்களும், பனுவல்களும் ன் கருத்தில் கலந்து களி டனமிடுகின்றன! தமிழ் ட்டு மண்ணின் ஒவ்வொரு டியிலும் சரிந்துபோன சாம் ஜ்யத்தின் சோக வரலாறு, ன் கண்ணுக்குத் தெரிகி து. அதோ! கடலலைகள் த்தமிட்டுத் தத்தி விளையா ம் பூம்புகார், ஒரு காலத்தில் ராமரும் கிரேக்கரும் உலவிக் டந்த நகரமாகும். மலைகளின் உச்சி ல், மாவீரர்கள் பலர் கட்டிவிட்டுச் சென்ற கோட்டைகள், என் மனதிலே ஆயிரம் கனவுகளைத் தூண்டுகின்றன. இவ்வளவு சிறப்பும், சிதைந்ததேன்? செந்தமிழ்நாடு மந்தைக் காடான தேன்? பூங்கொத்து புழுதிக்குள் போனதேன்?''

*

அபாயக்காரன்!

காட்டுமிராண்டி!!

பழைய சரித்திரத்தைக் காட்டி புதிய பிரச்னை களைச் சிருஷ்டிக்கிருன்.

வரலாறுகளைத் தங்களிஷ்டம்போல் வளைத் துக்கொள்கிறார்கள்.

*

கவினுறும் நாடு, காடானதைப்பற் றிக் கண்ணீர் சிந்தும் நமக்கு, வடவர் தலைவரும் அவர் தம் சீடரும் வழங்கி டும்வார்த்தைக்'குண்டு'களை, நாடுஅறி யும்! சிதைந்துபோன சித்திரத்தை மெருகூட்டுவதற்காக, அற்றை நாள் புகழையும் இற்றைநாள் வீழ்ச்சியை யும் எடுத்துக் காட்டுகிருேம், நாம். ஏடு கள், பேசுகின்றன! நாட்டின் சின்னங் களும் உண்மை ஒளிகளை வீசுகின் றன!! ஆனுல், நயவஞ்சகர்களோ, அவைகளை மனதில் ஏற்காது, இஷ்டம் போல் பேசி ஏளனம் செய்கின்றனர். பொன்னும் மணியும் மின்னிய பூமி யென்று பேசும் போது, அது புழுதிக் காடாகிப்போனதையும், அங்கே பூஞ் சோலை உண்டுபண்ண வேண்டிய அவ சியத்தையும் எடுத்துரைக்கிருேம்! இதனை எடுத்துரைக்கும் நோக்கமே, வீழ்ந்தோருள்ளத்தில் வீர உணர்ச்சி தோன்ருதா? தாழ்ந்தோர் மனதில் ஆர்வம்பிறக்காதா? தமிழ்பேசி, காதல் பேசி, வாளும் வேலும் உரச, புகழ்க் கொடி நாட்டியோர், புல்லையும் கல்லை யும் பூஜிக்கும் இழிநிலை பெற்றனரே -அதற்கு விமோசனம் உண்டாகாதா? —என்கிற ஆசைதான் காரணமாகும். அதனுல்தான், இலக்கியச் சோலையி லிருந்தும் நாட்டின் சின்னங்களிலிருந் தும் பழம் புகழைத் தேடி, நாட்டின் நாடிகளுக்குச் செலுத்துகிருேம்! இந்த நற்பணியை எள்ளி நகையாடும் 'நல்ல வர்களின்' தலைவராம் பண்டிதர், இதோ பேசுகிருர், கேளுங்கள்:-

''காசிக்குச் செல்லுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே அடிக்கும் நாற்றம் உங்களை விரண் டோடி வரச் செய்யும்! இதனை அங்கு சென்ற அமெரிக்க நண்பர்கள் பலர் என்னிடமே வந்து தெரிவித்தனர். உண்மைதான்! நாற்றம் அடிக்கும் நிலையில்தான் காசிமாநகரம் இருக்கி றது!! அதற்காக, நாம் அதை ஏளனம் செய்யக்கூடாது, உங்களுக்குப் பதில் நான் காசிக்குப் போகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு அங் குள்ள நாற்றம் தென்படுவதில்லை! ஏனெனில், அந்த நாற்றத்தைவிட, காசியின் புராதனப் புகழ் தான் என் கண்முன்னே வரு கிறது. 2500ஆண்டுகளுக்கு முன்னே புத்தர்பிரான் இங்கு தானே வந்தார் — அவர் அமர்ந்து கொள்கை பரப்பிய 'மாந்தோட்டம்' என்பது இதுதானே—என்ற நினைவு கள்தான் எனக்கு வருகின் றதே ஒழிய, காசியில் அடிக்கும் நாற்றம் தெரிவ தில்லை. என்னைப்போலவே, நீங்களும் இந்தியாவைப் பற்றி நினைக்கவேண்டும். எதையும் சகித்துக்கொள்ளும் சுபாவ மும், பொறுத்துக்கொள்ளும் தன்மை யும் நிரம்பவேண்டும். அந்தப் பொறுமையுள்ளத்துடன், நீங்கள் இந்தியாவை நோக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்''

வெளிநாட்டுப் பத்திரிகா நிருபர் களைக் கூட்டிவைத்து கடந்த 28ந் தேதி இந்த விளக்கத்தை வழங்கி யிருக்கிருர், பண்டிதநேரு! நாற்றம் அடிக்கும் - அப்போது பழைய வாச னையை நினைத்துக்கொள்வீர், என்கி ருர்!! அன்பர்களே, அடிக்கும் நாற் றத்தை வெளியில் போய்ச் சொல்லா தீர்கள்-இந்தியாவாம்! பெரிய நாடாம்! அங்கே புனித நகரமாம்! காசி க்ஷேத் திரமாம்! கண்டோம், அதனை. காரித் துப்பலாமா என்றெண்ணினேம். அவ் வளவு கேவலமான நகரம். நாற்றம் நாசியைத் துளைக்கிறது!—என்று, எங்கே இந்த வெளிநாட்டு ஏட்டாளர் கள் எழுதிவிடுவரோ என்கிற அச்சத் தில், 'பொறுமை'யெனும் பூணுரம் பூணவேண்டும் நீங்கள்!-என்று தெரி விக்கிருர்! நாற்றத்தை நறுமணம் எனக் கருதி, ''ஆகா! கண்டோம் காசியை! அதன் பெருமையைச்

[16-ம் பக்கம் பார்க்க]

மனிதனும் மகானும்!

[நக்கீரன்]

"ஒருவர் காலமானார்!"

"மற்றவர் முக்தியடைந்தார்!"

*

"ஒருவர் நீண்டநாட்களாகவே நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்து மரணமடைந்தார்!"

"மற்றவர் விபத்துக்கு உள்ளாகி விதேக முக்தியடைந்தார்!"

*

"ஒருவர் மனிதன்!"

"மற்றவர் மகான்!"

*

"மனிதர் மாண்டார்!"

"மகான் முக்தி எய்தினார்!"

*

"ஒருவர் மக்களை அறிந்தவர்!"

"மற்றவர் கடவுளை அறிந்தவர்!"

*

"மக்களை அறிந்தவருக்கு நோய்!"

"கடவுளை அறிந்தவருக்கு விபத்து!"

*

இந்த வாரத் தினத்தாள்கள் எல்லாம் நாம் மேலே தந்துள்ள கருத்துக்களை அடக்கிய செய்திகளோடு வெளிவந்துள்ளன. மனிதன் மரணமடைந்ததைப் பற்றியும் மகான் முக்தியடைந்ததைப் பற்றியும் உள்ள செய்திகளை மட்டும் வெளியிட்டதோடு நில்லாமல் அவ்விருவருக்கும் தலையங்கங்களும் தீட்டியுள்ளன. இதுமட்டுமல்ல, மனிதனை அறிந்தவர்கள், அந்த மனிதனுடைய மரணத்தால் மாநிலம் அடைந்துள்ள பேரிழப்பைக் குறித்தும்; மகானை அறிந்தவர்கள், அந்த மகான் முக்தியடைந்ததால் மகேசனை அறியக் காத்துக்கிடந்தவர்கள் அடைந்த ஏமாற்றத்தைக் குறித்தும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

மனிதனையும் மகானையும் ஒருங்கே அறிந்தவர்கள் அவ்விருவருக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை எடை போட்டுப்பார்த்து, எது ஏற்றம்—எது தாழ்வு என்பதனை எடுத்துக் கூறியுள்ளனர்.

*

யார் இந்த மனிதர்?

எவர் அந்த மகான்?

*

ஒருவர் நாகர்கோயிலை அடுத்த புத்தேரி கிராமத்தைச் சேர்ந்தவர்.

மற்றவர் மைசூரை அடுத்த சிருங்கேரியைச் சேர்ந்தவர்.

ஒருவர் மக்கள் கவி!

மற்றவர் மகேசனைக் காட்டுபவர்!

ஒருவர் பெயர் கவிமணி தேசிக விநாயகம்!

மற்றவர் பெயர் பெரிய சுவாமிகள் எனப்படும் ஜகத்குரு சந்திரசேகர பாரதிகள்!

கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் நீண்ட நாட்களாகவே நோய்வாய்ப்பட்டுக்கிடந்து 27—9—54-ல் **காலமானார்.**

ஜகத்குரு சந்திரசேகர பாரதிகள் 26—9—54 காலை 4-30 மணியளவில் தமது ஆசிரமத்துக்குப் பக்கத்தில் உள்ள துங்கா நதியில் நீராடச் சென்றபோது, கால் சறுக்கி வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் மூச்சுத் திணறலாலும் **விதேக முக்தியடைந்தார்.**

மனிதர்கள் மரணமடைவதும், மகான்கள் முக்தியடைவதும் சாதாரணமாக நம்நாட்டின் அன்றாட நிகழ்ச்சியாகும். இதை ஏன் இவ்வளவு பிரமாதப்படுத்த வேண்டுமென்று சிலர் கேட்கலாம். உண்மைதான்! நமக்கு கிடைத்துள்ள தினத்தாள்கள் உள்ளனவே! அவையெல்லாம், எப்பொழுது ஒரு மனிதன் மரணமடைவான்! எப்பொழுது ஒருமகான் முக்தியடைவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்து, செய்திகளை வெளியிட்டுத் தமது ஆவலாதிகளைத் தீர்த்துக் கொள்பவை என்பதும் நமக்குத் தெரியும். என்றபோதிலும், மரணமடைந்தவரைவிட முக்தி எய்தியவரை, மோட்சவிடுதியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு அந்தப்பத்திரிகைகள் படும்பாட்டையும் அவதியையும் எடுத்துக்காட்டவே இதனை எழுதுகிறோம்.

விபத்துக்கு ஆளாகி மாண்ட சங்கராச்சாரியாரை மோட்சவிடுதியில், கொண்டுபோய்விடும் முயற்சி எந்த அளவுக்குக் கையாளப்பட்டிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டும் முறையில் தினத்தாள்களில் வெளிவந்த செய்திகளில்சிலவற்றை இங்கு தருகிறோம்.

(1) ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி மடத்தின் பெரிய சுவாமிகளெனப்படும் ஜகத்குரு சந்திரசேகர பாரதிகள் 26–9–54 காலை 4-30 மணியளவில் தமது ஆசிரமத்துக்கு அருகில் ஓடும் துங்கா நதியில் நீராடச் சென்றபோது, வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டு, மூச்சுத் திணறி அதிர்ச்சி ஏற்பட்டு விதேக முக்தி அடைந்தார்.

(2) ஸ்ரீ சிருங்கேறி மடாதிபதி தமது முடிவைப்பற்றி ஏற்கனவே அறிவித்திருந்தார் நதியில் நீராடச்சென்று யோக சக்தியால் அவர் ஜல சமாதி அடைந்தார்.

(3) சுவாமிகளது சிஷ்யர்களான மகாபல பட்டரும் ஸ்ரீ கேசவர்சாரும் மிகவும் சிரமப்பட்டுச் சுவாமிகளது தேகம் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போகப்படாமல் தடுத்தனர்.

(4) சுவாமிஜியின் பூத உடலைக் கரைக்குக் கொண்டு வந்து பரிசோதித்துப் பார்த்ததில் உடலில் எவ்வித காயமோ, உயிருக்கு மன்றுடியதற்கான சின்னக்

களோ, ஜலத்தைக் குடித்து விட்டதற்கான அறிகுறியோ காணப்படவில்லை.

(5) கரைக்குக் கொண்டுவரப்பட்ட பின் செய்யப்பட்ட முதல் சிகிச்சையால் சுவாமிகளைக் காப்பாற்ற முடியவில்லை.

(6) சுவாமிகளுக்கு நேர்ந்தவிபத்து தற்செயலாக ஏற்பட்டதல்ல.

(7) சுவாமிகள் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடும் துங்கா நதிக்கு ஸ்நானம் செய்யப் போனார். அவருக்குத் துணையாக ஒரே ஒரு துணையாள்சென்றார். அவர் வழக்கமாக நீராடச் செல்லும் கட்டத்துக்குச்செல்லாமல் வேறிடத்தில் இறங்குவதைத் துணைக்குப்போனவர் கண்டு எச்சரிக்கை செய்தார். ஆனால், சுவாமிகள் "நாம் அறிவோம்" என்று சொல்லிவிட்டு ஆற்றில் மேலும் சென்றார். சங்கற்பம்பிராணயாமம் முடித்துக் கொண்டு முதல்முழுக்குப் போட்டு எழுந்தார். மறு கணமேவெள்ளம் அவரை இழுத்துப் போகத் தொடங்கிற்று. சுவாமிகளின் உடலம் மிதக்கலாயிற்று. துணையாள் உடனே குதித்துச் சுவாமிகளைக் காப்பாற்றப் போனார். சுவாமிகள் ஒரு சொட்டுக்கூட நீர் குடிக்கவில்லை. சுவாமிகள் சறுக்கி விழுந்து ஆற்றில் மூழ்கிவிட்டதாகக் கூறுவதற்கில்லை.

(8) சர். சி. பி. இராமசாமி அய்யர் சுவாமிகளைத் தரிசிக்க விரும்பியிருந்தார். அப்படி அவரைத் தரிசிக்கவருவதானால் பத்துநாட்களுக்குள் வந்தால்தான் பார்க்க முடியும் என்று சுவாமிகள் சர். சி. பி. க்குத் தெரிவித்திருந்தார்.

இவ்வளவும் சுவாமிகளை மோட்ச வீடுதியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக அவருடைய சிடகோடிகளால் கையாளப்பட்ட முறைகளாகும்.

ஆனால், வயது முதிர்ந்து நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தாரே கவிமணி தேசிகவிநாயகம்! அவர்களுடைய மரணத்தைக் குறித்து,

அவர் மரணமடையவில்லை — செத்து விட்டார்.

சாகவில்லை—உயிர்துறந்து விட்டார்.

என்பன போன்ற காரணங்களை விசித் தங்கள் விவேகத்தை யாரும் காட்டிக் கொள்ளவில்லை. என்ற போதிலும், ஆடு நுழைந்த கொல்லை பாழாவதுபோல், அன்பர் ஆச்சாரியார் இருக்கிறாரே, அவர், எந்தச் சமயத்தில், எந்த இடத்தில் பேசினாலும், அங்கே தம்முடைய விவேகத்தைக் காட்டிக் கொள்ளத் தவறுவதில்லை. கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் மறைவு குறித்துக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் பேசும் போது

"கவிமணி பல தினங்கள் துயரப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். சென்ற வருஷம் ஸ்ரீ டி. கே. சியின் நூலை அரங்கேற்ற நான் குற்றாலம் போனபோது ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அது வெண்பாவாகஎழுதப்பட்டிருந்தது. அதில், தாம் துயரப்பட்டுக்கிடப்பதாகவும் நடராசன் அடியில் முன்னால், போய் இடம் ஏற்பாடு செய் என்றும் எழுதியிருந்தார். அதன்படியே நடந்தது. டி. கே. சி. சிறிது நாட்களில் மறைந்தார். இப்போது கவிமணியும் ஏற்பாடு செய்யப்பட்ட இடமாகிய நடராசர் பாதத்தில் போய்ச் சேர்ந்து விட்டார்."

என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார். கவிமணி அவர்கள் இப்படி ஒரு கடிதம் எழுதினாரா என்பது பற்றிய ஆராய்ச்சியில் நாம் இறங்கவில்லை. ஆனால், கவிமணி கேட்டுக் கொண்ட ஒரு முக்கியமான காரியத்தை அவர் செய்யாமல், அதை, வேறொருவரிடம் ஒப்படைத்து விட்டதைப் பற்றித்தான் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். கவிமணி ஆச்சாரியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதனை ஆச்சாரியாரே ஒப்புக்கொண்டு **"ஒரு கடிதம் எனக்கு எழுதினார்"** என்று கூறுகிறார். ஆனால் பிள்ளை அவர்களின் ஆசையை ஆச்சாரியார் நிறைவேற்றவில்லை.

"எனக்கு முன்னால் நீ நடராசர் திருவடியை அடைந்து எனக்கு ஒரு இடம் ஏற்பாடு செய்"

என்று ஆச்சாரியாரை கவிமணி தம்முடைய கடிதவாயிலாகக் கேட்டிருக்கிறார். ஆனால், ஆச்சாரியார் கூறுகிறார்.

"அப்படியே நடந்தது" என்பதாக! இதை எப்படி நம்புவது? ஆச்சாரியார் எப்பொழுது நடராசர் திருவடியை அடைந்து தனக்குப் பக்கத்தில் கவிமணிக்கும் ஒரு இடம் ஏற்பாடு செய்தார்?

அன்பர் ஆச்சாரியார் இன்னும் பல காலத்திற்கு நல்ல திடகாத்திரத்துடன் உயிர் வாழ்ந்து திராவிட மக்களை இன்னும் நன்றாக வழிப்படையச் செய்யுங் காரியங்களில் ஈடுபட வேண்டுமென்ற எங்கள் (திராவிடமக்கள்) விருப்பத்தை நிறைவேற்றும் முறையில் எல்லோரையும் மகிழ்வித்துக்கொண்டு இன்னும் இருந்துகொண்டிருக்கிறாரே, அப்படிப்பட்ட ஒருவரை, "நீ முன்னால்சென்று எனக்கு இடம் ஏற்பாடு செய்" என்று கவிமணி அவர்கள் கேட்டிருந்தது உண்மையானால், அது, மிகமிகக் கண்டிக்கக் கூடிய ஒன்றாகும். ஒரு தமிழன் தன்னுடைய சிறந்த பண்பாட்டுக்கே முரணாக நடந்துகொண்டானே என்று கூட எண்ணத்தோன்றுகிறது. உயிரோடிருக்கும் ஒருவரைப் பார்த்து, "நீ முதலில் இறந்துவிடு, உனக்குப்பின்னால் நான் இறக்கிறேன்" என்று கூறுவதை அளவு கடந்த நட்பின் விளைவாகக் கூறப்படும் ஒரு தமாஷாக வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாமே தவிர உண்மையாகவே உயிரோடிருக்கும் ஒருவரை இறக்கும்படி கேட்டுக்கொள்வது என்பது நாகரிகத்துக்குப் புறம்பான ஒன்றென்றே எவரும் கருதுவர். அதுஎப்படியோ போகட்டும், பெரியவர்கள் ஒருவருக்கொருவர் எப்படி யெப்படியோ அளவளாவி ஆனந்தமடைவர்; இறப்பதில் கூட நான் பின்னால் நீ முன்னால் என்று வரையறுத்துக்கொள்வர் போலும்! ஆனால் அன்பர் ஆச்சாரியார் தமக்கிட்ட பணியை வேறொருவரிடம் ஒப்படைத்து விட்டதுதான் இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கவிமணி கடிதம் எழுதிய சிறிது நாட்களுக்குப் பின்னர் ரசிகமணி இறந்து விட்டதாகவும், அவர் நடராசருடைய திருவடியை அடைந்து கவிமணிக்கும் ஒரு ஏற்பாடு செய்ததாகவும் ஆச்சாரியார் கூறுகிறார். கவிமணியின் விருப்பத்தை ஆச்சாரியாருக்குப் பதில் ரசிகமணி நிறைவேற்றி

திருமணம்

12-9-54ல் பி. சுப்பிரமணியம் — சுந்தரேஸ்வரி திருமணம், சென்னை ராயபுரத்தில் கா. மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் நடைபெற்றது.

வைத்துவிட்டார் என்ற 'உண்மை'யை மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு ஆச்சாரியார் தெரிவிக்கிறார். "கவிமணி விரும்பியது" அப்படியே நடந்தது— நான் செய்யவேண்டிய ஒரு பெருங்காரியத்தை ரசிகமணி கைம்மாறு கருதாது தாமே செய்துவிட்டார்" என்ற பொருள் படப் பேசி இருக்கிறார். இப்படியும் பேசலாம்! இன்னும் பல விதமாகவும் பேசலாம் தட்டிக்கேட்க ஆள் கிளம்பும் வரையில்!

*

விபத்தேற்பட்டு விதேகமுக்தியடைந்த சிருங்கேரி மடாதிபதியைக் காப்பாற்ற முனைந்துள்ள அவரது சீடகோடிகள் கூறும் காரணங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் அடங்கியுள்ள தத்துவப் பித்தலாட்டங்கள் எல்லாம் நன்ருகப் புரிந்துவிடும்.

ஆற்றிலே வெள்ளம் கட்டுக்கடங்காத பிரவாகமாக இருந்தது. அதில் குளிப்பதற்காக இறங்கிய (பிரவாகத்தில் இறங்கக்கூடாது) சுவாமிகளை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது என்று கூறியதோடு நின்றுவிடாமல்,

"ஜலசமாதி அடைந்து விட்டார்"

"உடலில் காயமில்லை"

"உயிருக்கு மன்றாட வில்லை."

"ஒரு சொட்டு நீர்கூடக் குடிக்கவில்லை."

"தற்செயலாக ஏற்பட்ட விபத்தல்ல"

"ஸர். சி.பி. சுவாமிகளைத் தரிசிக்க விரும்பினார்."

"பத்துநாட்களுக்குள் வந்தால் தான் முடியும் என்று சுவாமிகள் தெரிவித்திருந்தார்" என்பன போன்ற எத்தனையோ காரணங்களைக் காட்டி அவரை மோட்ச விடுதிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள்! ஏன்?

*

"மூச்சுத்திணறல்"

"அதிர்ச்சி"

"மாரடைப்பு"

"முதல் சிகிச்சை"

"சறுக்கி விழுந்து விபத்துக்கு ஆளானார்"

மகாபலபட்டரும் கேசவாச்சாரும் சுவாமிகளின் சடலத்தைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள்."

"வழக்கத்துக்கு மாருகப் புது இடத்தில் நீராட இறங்கினார்."

மகாப்லபட்டர் எச்சரிக்கை செய்தார்."

"நாம் அறிவோம் என்று சுவாமிகள் பதிலளித்தார்."

"நீராடச் சென்ற நேரம் காலை 4-30 மணி."

"ஒரு பர்லாங்கு தொலைவில் கேசவாச்சாரி நின்றுகொண்டிருந்தார்."

"வெள்ளத்தில் மிதந்துவரும் இருசடலங்களைக் கண்டார்—கரைக்குக் கொண்டுவந்தார்" என்ற இவை போன்ற இயற்கையான சம்பவங்களையும் நாம் மேலே குறிப்பிட்டுள்ள 'அற்புத' சம்பவங்களையும் ஒப்பு நோக்கிப் பார்ப்பவர்கள் யாராயிருப்பினும் சரி, கட்டாயம் சிந்திக்கத்தான் செய்வார்கள். ஒரு விஷயத்தைப்பற்றிய தெளிவு ஏற்படவேண்டுமானால் அதைப்பற்றிச் சிந்திக்கத்தானே வேண்டும்!

*

ஒரு மனிதனுடைய மறைவு குறித்துப் பேசுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் முக்தியடைந்த மகானைப்பற்றியும் பேசப்பட்டிருக்கிறது.

"கவிமணி உலகைவிட்டு மறைந்தார். அதே சமயத்தில் மற்றொரு பெரியாரும் (சிருங்கேரி சுவாமிகள்) மோட்சம் அடைந்துள்ளார்"

கவிமணி, உலகைவிட்டு மறைந்தாராம்! சிருங்கேரி சுவாமிகள் மோட்சம் அடைந்தார்களாம்!

ஒருவருக்கு மறைவிடம்! மற்றவருக்கு மோட்சஉலகில் உறைவிடம்!

மனிதர் மறைகிறார்! மகான் முக்தியுலகில் இருக்கிறார்!

மனிதனுக்கும் மகானுக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை எடுத்துக்காட்டுவதற்காகக் கூறப்பட்ட வாசகமா இது என்று சிந்தித்துப் பார்க்கத்தானே வேண்டும்.

ஒருவர் மறைவதும், மற்றவர் மோட்சமடைவதுமான வேறுபாடுகளை நாட்டிலுள்ளவர்கள் நன்கெண்ணிப் பார்க்கட்டும் என்ற எண்ணத்தோடுதான் இப்படிப் பேசினார்களோ என்று சிந்தித்துப் பார்ப்பதில் தவறென்ன இருக்கிறது?

இதுமட்டுமல்ல, இன்னும் ஒன்றிருக்கிறது, சிந்தித்துப் பார்க்க வேண்டிய மிக முக்கியமான விஷயம்,

"மறையும் ஒவ்வொரு பெரியாருக்கும் பணம் வசூலித்து ஆலயம் எழுப்புவது என்பது கஷ்டமானதாகும். அவரவர்கள், தங்கள் வாழ்நாளில் நினைவாலயங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்."

என்று ஆச்சாரியார் பேசியிருக்கிறார். கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் நினைவாக மண்டபமோ கோயிலோ கட்ட வேண்டியதில்லை என்பது ஆச்சாரியாரின் கருத்து. இதை நாமும் வரவேற்கிறோம். பொது நலத்தொண்டு செய்பவர்களை எதிர்காலத்தவர்கள் நினைப்பதற்கு மண்டபமும் கோயிலும் தேவையில்லை என்பதே நமது கருத்துமாகும்.

திருவள்ளுவருக்கும் இளங்கோவுக்கும் பிறசங்க காலத் தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கும் நாம் என்ன நினைவு மண்டபங்களும் கோயில்களுமா கட்டிவைத்திருக்கிறோம்? திருவள்ளுவரை அவர் நூல் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. அது ஒன்றே போதும். அது போலவே கவிமணிக்கும் அவரது நூல் அவரை நினைவுபடுத்தப் போதுமானதாகும். தனி ஏற்பாடு எதுவும் தேவையில்லை. ஆனால், கவிமணியை பொறுத்த பாரதியாருக்கு நினைவு மண்டபம் இருக்கும்போது இவருக்கும் அது போல் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது ஒன்று இருந்தால் என்ன என்று கவிமணியின் அன்பர்கள் சிலர் கேட்கலாம். பாரதியாருக்கு மண்டபம், காந்தியடிகளுக்கு நினைவாலயம் ஏற்படுத்தியதுபோல் மறைகின்ற பெரியார்கள் எல்லோருக்குமே நினைவுச் சின்னங்கள் எழுப்ப ஆரம்பித்தால், "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" "தோத்துக்கொரு பிதா காந்தியடா" என்ற புதுமொழிகளை இழிவு படுத்துவதாக முடியாதா என்று வேறு சிலர் கேட்கலாம்.

எனவேதான் ஆச்சாரியார் அவர்கள் தம்முடைய சூட்சும புத்தியை உபயோகித்து, மறைகின்ற பெரியார்களுக்கெல்லாம் பணம் வசூலித்து நினைவாலயங்கள் கட்ட வேண்டியதில்லை என்று இரத்னச் சுருக்கமாகக் கூறிவிட்டார் என்று யாராவது கூறமாட்டார்களா என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க ஒரு சிலராவது இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்!

★

விதைக்காது விளையும் கழனியாச்சே!

இதோ, இருக்கிறதே பவுண்டன்பேனு.
கண்டுபிடித்தவர் யார்?
வாட்டர்மேன்,
ஒரு அமெரிக்கர்.

இந்தத் தையல் மிஷன்?
ஹோவ்
ஒரு அமெரிக்கர்.

அச்செழுத்து?
ஜான்கூடன்பர்க்
ஒரு ஜெர்மானியர்.

தொலைக்கண்ணுடி.....?
லிப்பர்ஷே-
ஒரு டச்சுக்காரர்.

ஓடும் ரயில் எஞ்சின்?
ஸ்டீவென்சன்
ஒரு ஆங்கிலேயர்

சுடும் ரிவால்வர்?
கோல்டு
ஒரு அமெரிக்கர்.

*

ஏதையெடுத்தாலும் ஒரு அமெரிக்கர், ஒரு ஜெர்மானியர், ஒரு இங்கிலிஷ்காரர், ஒரு டச்சுக்காரர் என்றிருக்குமே யொழிய 'நாம்' கண்டுபிடித்தோம், என்றிராது! எனினும் அமெரிக்கக் கம்பெனி செய்து தந்த ஒலிபரப்பியின் முன் உட்கார்ந்து, ஜெர்மானியன் செய்து காட்டிய அச்செழுத்தில் உள்ளதை, இங்கிலிஷ்காரன் செய்து அனுப்பிய பேனுவைக்கொண்டு, நார்வேக்காரன் செய்து அனுப்பும் தாளில், பெல்ஜியத்தான் அனுப்பும் மூக்குக் கண்ணுடியின் உதவி கொண்டு, எழுதுகின்றனர், இங்குள்ளோர்! பேசவும் செய்கின்றனர், எழுதியதை!!

இரண்டொரு தினங்களுக்கு முன்பு சென்னையின் ஒரு மூலையில் நடைபெற்ற 'ராமாயணகாலட்சேபத்துக்கு' தலைமை வகித்த ராசகோபாலாச்சாரியார், 'இந்தியா, ஆத்மீக அறிவுக்குப்பேர் பெற்றது' என்று முழங்கியிருக்கிருர். எதிரே ஒலிபெருக்கியும் இருந்ததாம்! 'எவனே' செய்த இயந்திரம் அடித்துக் கொடுத்த ரூபாய் நோட்டுகள் 71 வேறு கிடைத்ததாம்!! எனினும் வெளிநாடுகளுக்கு இந்தியாவே, 'ஆத்மீக அறிவை' ஏற்றுமதி செய்யும் அந்தஸ்துபெற்றதென்ருராம்!!

'ஆத்மீக அறிவை ஏற்றுமதி' செய்யும், தகுதியுள்ள தேசத்திலிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளுகிருர், ராசகோபாலாச்சாரியார்!

அதே வாரத்தில் டில்லி பார்லிமெண்டில் நமது 'தேசத்தின் கேடுகெட்ட நிலையைப் பாரீர்!', என்று வேதனையோடு வெளியிடுகிருர், கிருஷ்ணமாச்சாரியார்!!

"ஒரு டைப்ரைட்டர் செய்யக் கூடிய நிபுணர் கூட இல்லை, இங்கு"

"போதிய நிபுணர்களும் அறிஞர்களும் இல்லாத காரணத்தால் தான் வெளி நாட்டாரைக்கொண்டு, இங்கே, தொழிற்சாலைகளை ஆரம்பிக்கச் செய்கிருேம்," என்று, வெளியிட்ட பின்னரே, அறியாமையின் அதலபாதாளத்தில் கிடக்கிருேம் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிருர், கிருஷ்ணமாச்சாரியார்!

அவரது கம்பெனி இங்கேயிருக்கிறது—வேண்டியவர்களாம் 'இந்து' சீனுவாசன், மித்திரன் 'சீனிவாசன்', பஸ் முதலாளி டி. வி. எஸ். அய்யங்கார், சினிமா அதிபர் வாஸன், எழுத்தாளர் 'கல்கி' முதலியோர் இவர்களில் சிலர், அவருக்கு பந்துக்கள் கூட! அவரைப் போலவே படித்துச் சிறந்தவர்கள் கூட!! அவர்களது இல்லத்துக்கும், 'கம்பெனிகளுக்கும்' சென்று பாருங்கள்— இரண்டொரு நாளில்! 'அறியாமையின் அதல பாதாளத்தில் நாடு இருக்கிறது' என்று அங்கலாய்த்துக் கொண்டாரே, அவருடைய நண்பர்களின் நல்வாழ்வுக் கூடங்களைச் சென்று பாருங்கள்!!

*

ஆயுதபூஜையை முன்னிட்டு இன்று ஆபீசுக்கு லீவு.

*

சரஸ்வதி பூஜையை வாசன் சிறப்பாகக் கொண்டாடினார். 'காமிரா'வுக்குப் பொட்டிட்டு மாலையிட்டபின், ஸ்டுடியோவிலிருந்த எல்லா இயந்திரங்களுக்கும் அவரே நேரில் சென்று தூபதீபம் காட்டி நமஸ்கரித்தார். மாலை, அதைபொட்டி டான்சும் நடந்தது.

*

எல்லா 'பஸ்'களுக்கும் இன்று பூஜை நடைபெற்றது. பொட்டிட்டு, பூமாலை சூட்டிய தோடன்றி, நைவேத்யமும் காட்டப்பட்டது.

*

"ஓடுகிற 'பஸ்' நின்றுவிட்டால், அது ஏன் நின்றது என்று கண்டு பிடித்து சரி செய்யககூடிய டிரைவர்களே கிடையாது. ஏதோ ஓட்டக் கற்றுக் கொண்டார்களே யொழிய, அது எப்படி ஓடுகிறது, ஏன் நின்று விட்டது என்கிற விபரமே தெரியாது!!"

ஆத்மிக அறிவின் சிகரம்—என்கிருர், அவர்!

அறியாமையின் அதலபாதாளத்தில் கிடக்கிருேம்—என்கிருர் இவர்!!

தேசம், ஒன்றுதான்—அதுபற்றி, இருவரும் தருகிற விளக்கம், இது.

*

எங்கும், தவருது நடக்கும்! "ஆத்மீக அறிவு," செழிப்பதாகச் சொன்ன ராசகோபாலர் இல்லத்தில் மட்டுமல்ல— "அறியாமையின் பாதாளத்தில் கிடக்கிருேம்" என்று

சொன்ன கிருஷ்ணமாச்சாரியின் வீட்டில் கூடத்தான்— தவருது, தயக்கமின்றி, சரஸ்வதி பூஜை நடைபெறும்!! அது வேண்டாமென்ருே; சரஸ்வதி பூஜையில்லா நாட்டில் தானே நாம் அணியும் மல்லும், எழுதும் பேனவும், வாழ வழிதரும் இயந்திரமும், அதை இயக்கும் மின்சாரமும், பறந்து செல்லும் விமானமும் கண்டு பிடிக்கப்பட்டது; அவர்கள் எல்லாம் சரஸ்வதியைக் கும்பிட்டா செய்தார்கள் என்ருே, கேட்கமாட்டார்!! ஏனெனில், அது நாஸ்திகம்— பழி யேற்கத்தான் நாம் இருக்கிருேமே, நாம்!

பிறகேன், கூறினுர்?—என்கிறீர்களா— ஒரு பார்லிமெண்டு உறுப்பினர், கொஞ்சம் துடுக்கு. அவர் கேட்டாராம், "ஐயா, கிருஷ்ணமாச்சாரியாரே! முற்றும் துறந்து தேச நன்மைக்காகவே மந்திரிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதாக நீங்கள் எல்லாம் சொல்லுகிறீர்களே? அப்படிப்பட்ட நீங்கள், வெள்ளையனுக்கும், அமெரிக்கக் கொள்ளையனுக்கும் நாட்டை வேட்டைக்காடாக்கிக் கொண்டிருக்கிறீர்களே? இது தகுமா! இது தான் சுதந்திரமா!! என்ன காரணம், இப்படி அவர்களுக்கு நீங்கள் எல்லாம் பயந்து நடுங்குகிறீர்களா? அவர்கள் தயவு ஏன்? உம்மைப்பற்றி ஒரு செய்தி கேள்விப்பட்டோம்! நீர் ஒரு இங்கிலீஷ்காரன் கம்பெனிக்கு, ஏஜண்டாமே—உமக்கு சென்னையில் பெரிய கடை உள்ளதாமே—அதனுல்தான் அவர்கள் தயவைப் பெற விரும்புகிறீரா?", என்று.

அதற்கு, அமைச்சர், என்ன பதிலைச் சொல்லுவார்? இங்கே தான், ஒரு கம்பெனியிருக்கிறதே அவரது பெயரில்! மறுக்கவா முடியும்? அதனுல்,

"உறுப்பினர் தவருகப் புரிந்து கொண்டிருக்கிருர். ஒரு கம்பெனி இருப்பது உண்மை. அது வெள்ளைக்கார கம்பெனிக்கு ஏஜண்டாக இருப்பதும் உண்மை. அந்தக் கம்பெனி என் பெயரில் இருக்கிறதே ஒழிய, அதனை நான் நடத்தவில்லை; என் பிள்ளைகள் நடத்துகிருர்கள்!" என்று பதில் சொல்லத் துவங்கி, கடைசியில், "என்ன செய்வது? புத்திசாலிகளும் நிபுணர்களும் இங்கேயில்லையே! ஒரு டைப்ரைட்டர் செய்யவும் நமக்குத் தெரியவில்லை! ஒரு 'பஸ்' ரிப்பேரும் சரியாகத் தெரியவில்லை!! அதனுல் தான், வெளிநாட்டாரின் உதவியைத் தேடுகிருேம்" என்று முடித்திருக்கிருர்.

*

நிபுணர்கள் இல்லையாம்! எப்படி இருப்பார்கள்? வெளி நாட்டான் செய்து அனுப்பிய இயந்திரங்களுக்குப் பொட்டிட்டு பூமாலை சூட்டும் திருப்பணிக்குத்தானே, நம்மவர்களைத் தயார்செய்து வருகிருேம். தவறு! வேண்டாம்! அந்த நிபுணர்களின் நாட்டில் சரஸ்வதி கிடையாது — நாமும்தான் சரஸ்வதி பூஜையை ஆண்டாண்டுகாலம் கொண்டாடி வந்தோமே — என்ன பலன் ஏற்பட்டது? 'ஆகவே, அறிவே தெய்வம் என்பீர்!'—என்று எடுத்தோத முன்வருவரா, கிருஷ்ணமாச்சாரியும் அவரது திருக்குழாமும்.

ஏன், வருகிருர்கள்? ராசகோபாலர், வேறு வழியில்லாததால், சேமங்கலத்தைத் தட்டுகிருர்—ஆத்மிக அறிவே, பெரும் பிரசாதம்! என்று.

இவர்களுக்கு, வேறு தொழிலிருப்பதால், அதற்குத் தக்கபடி பேசுகிருர்கள்.

வித்யாசம், அதுதானே ஒழிய; அவர்கள் யாவரும் ஒரே காட்டின்—முள்ளுச் செடிகள்தான்! சும்மாவா, சொன்னுர்கள். "விதைக்காது விளையும் கழனியப்பா அது; உழைக்காது விளையும் தோட்டம்," என்று!! அதனை, பிறரைவிட, நன்ருக அறிந்தவர்கள்தானே, இன்றைய உலகில் பிரகாசிக்கும் 'அவர்கள்'!!! இழப்பரா, அதனை? பிறர் அறியத்தான் செய்வரா? சச்சிவோத்தமரும், சகலகலாவல்லி அருண்டேலும், இன்னும் கட்டிக்காக்க விரும்புவரா, சனுதனத்தை! அதனைக் காக்க சல்லடம் கட்டிக்கொண்டு கிளம்புவரா!! ஆரியமதம்—விதைக்காது விளையும் கழனியாச்சே!!!

★

கரைகிறது

—

பட்டக்காரர் சேர்ந்தார்
மிட்டாதாரர் வந்தார்
ராஜா வந்துவிட்டார்
ஜமீன்தார் வருகிருர்

இவ்விதம், 'காங்கிரசில்' ஏராளமானேர் சேர்வதாக, அவ்வப்போது ஏடுகளில் செய்திகளைக் காண்கிருேம்! ஆனல், இதோ ஒரு உண்மை வெளியாகியிருக்கிறது!! அதுவும், காங்கிரஸ் தலைமைப்பீடமாம் டில்லியிலிருந்து கிடைத்த உண்மை.

1952ல் 88 லட்சம் உறுப்பினர் இருந்தனராம்—காங்கிரசுக்கு, 1953ல் அது 61 லட்சமாகக் குறைந்துவிட்டதாம்! தீவிர மெம்பர்கள் என்போர் மூன்று லட்சம் இருந்தனராம் — அது 71 ஆயிரமாகக் குறைந்துவிட்டதாம்.

"இப்படிக் குறைந்துகொண்டே போனல், என்ன ஆவது?"—என்று காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பலமாக விவாதிக்கப்பட்டதாம்.

நிலைமை, இது. ஆனல், இங்குள்ளோரோ, சிந்து பாடுகின்றனர்! சீரழிவைக் காட்டுகிறது, புள்ளி விவரம்!!

இப்படிக் காங்கிரஸ் உறுப்பினர்கள் தொகை குறைந்து கொண்டே போனல், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பலம் குன்றிவிடும் என்ற அச்சம் காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக் கலங்கவைத்திருக்கிறது. எப்படி இந்த நஷ்டத்தை ஈடு செய்வதென்பதில் தீவிர ஆலோசனை நடத்தியபின் தலைமைப் பீடம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில்,

> "அசெம்பிளி அல்லது பார்லிமெண்ட் தேர்தல்களில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களுக்கு எதிராக நின்று வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர்களை மீண்டும் காங்கிரசில் சேர்த்துக் கொள்ள காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி போர்ட் முடிவுசெய்துள்ளது. ஆனல், அவர்கள் காங்கிரஸ் கொள்கைகளை ஏற்பவர்களாகவும், அல்லது காங்கிரஸ் கட்டுப்பாட்டின்படி நடப்பவர்களாகவும் உறுதியளிக்கவேண்டும்".

என்று குறிபிடப்பட்டிருக்கிறது. "நீங்கள் போனலும் உங்களை நாங்கள் விடமாட்டோம். இதோ கதவு திறந்து வைக்கப்பட்டுவிட்டது. தாராளமாக உள்ளே வரலாம். யாராரோ ஊர் பேர் தெரியாதவர்

கள் எல்லாம் வீட்டுக்குள் இருக்கிறார்களே என்று யோசிக்கிறீர்களா? எல்லாம் உங்களால் வந்த வினை தான்.

நீங்கள் வெளியேறியதும் வீடே காலியாகிவிடும்போல் தெரிந்தது. நிரம்பிவழிந்தவீட்டில் மூலைக்கொருவராவது இருக்கட்டுமென இவர்களை அனுமதித்திருக்கிறோம்—அவ்வளவுதான்—அச்சம் விடுத்து வீட்டுக்குள் வாருங்கள்—எங்கள் மானத்தைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்பது போல் காங்கிரஸ் தலைமைப்பீடம் தாக்கீது அனுப்பி இருக்கிறது. ஒவ்வொரு பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளும், இனி, கரைகிற காங்கிரசைக் காப்பாற்ற ஆள்தேடு படலத்தை ஆரம்பிக்கப் போகிறது. எப்படியாவது, காங்கிரஸ் இன்னும் சில காலத்துக்காவது கரையாமல் இருக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தும் நிலைமைக்கு காங்கிரஸ் தலைமைப் பீடம் தள்ளப்பட்டு விட்டது. ஆனால், காங்கிரஸ் ஏன் கரைந்து விட்டது என்ற காரணத்தை அவர்கள் அறிய முயலவில்லை என்றே தெரிகிறது. அறிய முயன்றிருந்தால், இனி, அதைப் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாதென்பதை அவசியம் தெரிந்து கொள்வார்கள். சுதந்திரத்தைப் பெறுவதற்குத் திரட்டப்பட்ட பலம் இப்போது—சுதந்திரம் பெற்றபின் ஏன் கரைகிறது? சிறிது கருத்துத் தெளிவோடு காரணத்தை அறிய முயன்றால் உண்மை வெளியாகும். இப்போது ஆள்தேடும் படலத்தில் இறங்கும் காங்கிரஸ் அன்பர்கள் இதனையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பது நமது விருப்பம்.

★

திண்டாட்டம்

"மாதே! வா, சிறிதுநேரம் உரையாடி மகிழ்வோம்!!"

"மயிலே! வா, வா. தென்றலும் சோலையும் வீணாகிறது, செல்வோம் அங்கே!"

"உன்னருகிலிருக்க ஏங்கும் மனம் துள்ளுகிறது, உள்ளம் துடியிடையே! வாடி போவோம்!"

"கண்ணல்ல! கேள்! கைகோர்த்து உலவி வருவோம்......"

"எனக்குமட்டும் இருக்காதா ஆசை? பிரியவதி! பிரேமவல்லி! ஆற்றோரம் சென்றிடலாம், வாயேன்"

★

ஐந்துபேர் அழைக்கின்றனர், அவளை! எல்லோருக்கும் உரிய பொதுச் சொத்து அவள்! என்ன செய்வாள்? ஐவரும், அவளுக்குக் கணவர்கள்! ஒருவர் விருப்பத்தை மீறி இன்னொருவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யப் போனாலோ, 'பதிசொல் தவறிய பாவை' என்கிற பழி ஏற்படும். பரிதாபத்துக்குரியவள் என்னடா செய்வாள்? பேய் ரங்கு! என்னடா செய்வாள்?—என்று 'சந்திரமோகன்' நாடகத்திலே, காகபட்டர், சீடன் ரங்குபட்டரைக் கேட்பார். சீடன் விழிப்பான்!—துருபேன். அந்தப் பத்தினி பாஞ்சாலியின் நிலைமையும் பரிதாபமாக ஆகியிருக்குமே என்று அங்கலாய்ப்பான்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

பாஞ்சாலியின் நிலையில் பரிதவிக்கிறார், டில்லி மந்திரி, அஜித் பிரசாத் ஜெயின் என்பவர். டில்லி பார்லிமெண்டில் செப். 25ந் தேதி அகதிகள் சொத்து பராமரிப்பு சம்பந்தமாக மசோதா கொண்டுவர இருந்தார்! அம்மசோதாவைப் பிரேரிக்க சிறிது நேரமாகும் என்றதும், டில்லி மேல்சபைக்குச் சென்றார். ஏனெனில், அங்கும் அவருக்கு வேலை இருந்தது. அங்கே போய், விவாதம் ஒன்றுக்கு பதிலளித்துக் கொண்டிருக்கும்போது, பார்லிமெண்டில் காங்கிரஸ் 'கொறடா'வாக இருக்கும் சத்யநாராயண் என்பவர், ஓட்டம் ஓட்டமாக ஓடிவந்தார், மேல்சபைக்கு! மந்திரியிடம் சொன்னார், "ஐயா, பார்லிமெண்டு உங்கள் மசோதாவை எடுத்துக் கொள்ளப்போகிறது, வாரும், வாரும்" என்று அழைத்தார். அவ்வமைச்சர்தானே மசோதாவைப் பிரேரிக்கவேண்டும்! என்ன செய்வார் அமைச்சர்! மேல்சபையிலோ விவாதத்துக்குப் பதில் கூறி முடியவில்லை—கடமையோ, பார்லிமெண்டில் வேலையிருக்கிறதென அழைப்பு! இரண்டும் பொறுப்பான விஷயங்கள். பாதிக்கிணற்றைத் தாண்டியவனைப்போல பதிலைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு பாய்ந்து ஓடினாராம்—பார்லிமெண்டுக்கு. பாஞ்சாலி, ஐவருக்கு வாழ்க்கைப்பட்டு அவதிப்பட்டாள்! காங்கிரஸ் மந்திரிகள், இரண்டு சபைகளை வைத்துக்கொண்டு அவதிப்படுகிறார்கள்!! எதற்காக இரண்டு சபை?—என்று கேட்டால் முறைத்துப் பார்க்கிறார்கள். இரண்டு ஆட்டில் ஊட்டும் குட்டியின் நிலை! எனினும், போலிக் கௌரவம்!!

★

அரசியல் 'கொலு'வில்!

புதிய பொம்மை

★

நித்யானந்த கனுங்கோ என்பவர் டில்லி பீடத்தின் துணை மந்திரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர், வர்த்தக இலாகாவில் பணியாற்றுவார்.

இட மாற்றம்

★

பண்டித நேருவின் சகோதரி விசயலட்சுமி இதுவரை அமெரிக்க நகரில் இருந்தார். இனி, லண்டன்மாநகரில் இருப்பார். அவர்தான், இந்தியாவின் பிரிட்டிஷ் அரசியல் தூதராம்—இனி!

திராவிடநாடு

காஞ்சி] 3—10—54 [ஞாயிறு

'முதல் தேதி' நோக்கிகள் அல்லல்!

★

"அப்பா! பேனா இல்லாமல் எழுத முடியவில்லையப்பா - பேனா ஒன்னு வாங்கிக்கொடு, அப்பா!"

"முதல் தேதி—வரட்டும்!"

★

"இப்படி 'பால்' கொடுக்க எங்களாலே ஆகாது. எத்தனை மாசத்துப் பாக்கி, அப்படியே கிடக்குது? ஏம்மா! ஐயாவுக்குத்தான் காது கேட்கலே! நீங்க சொல்லவேணும். நானும் பிள்ளைகுட்டிகாரன்தான்! எங்க அப்பார் ஒண்ணும் சொத்து கட்டிவைச்சிருக்கலே-உங்களுக்கெல்லாம்உதவ!! ஐயா வந்ததும், சொல்லுங்க, பணம்! இல்லேன்னா 'பால்', இனிமேல் 'த—பால்'தான்!!"

"ஆகட்டும்பா! ஒண்ணும் தேதி வரைக்கும் பொறுத்துக்கோ. சம்பளம் வந்ததும் பட்டுவாடா பண்ணிடறேன்."

⁕

முதல் தேதி!—பல வீடுகளிலே, இன்பக் கனவுகளுடன் எதிர்பார்க்கப்படும் நாள். ஆபீசிலிருந்து அப்பா சம்பளம் வாங்கி வந்ததும் பேனா வாங்கிட எண்ணும் மகனும், பழைய 'பாக்கி'களைத் தீர்க்க வேண்டுமெனக் கனவு காணும் இல்லற ஜோதியும், அடுத்த மாதத்துக்கு யாரிடம் 'கடன்' வாங்கினால் காலத்தை ஓட்ட முடியும் என்ற நினைவோடு பெற்ற சம்பளத்தை பிரியாளிடம் கொண்டுவரும் கணவனும்—ஏராளம், உலகில்! ஆம், இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகிலேயே ஏராளம்!! இப்படிப்பட்ட குடும்பங்கள் பெருகியிருப்பதையே, "மத்தியதர வர்க்கம்" எனும் பெயர் சூட்டி அழைக்கின்றனர், அரசியல் வாதிகள். இந்த மத்தியதர வர்க்கம், 'கார்ல் மார்க்சின்' காலத்திலே இல்லாதது—அரை நூற்றாண்டிலே, அகில உலகிலும் வளர்ந்து கிடப்பது. இவர்கள் பட்டியலிலே, மூளையைக் குழப்பி கருத்து வடிக்கும் பத்திரிகாசிரியனும், பட்டம் பெற்றும்'கணக்கு' எழுதும் நிலைபெற்ற குமஸ்தாவும், ஏழையாகவுமிராமல் பணக்காரனாகவுமில்லாமல் இரண்டுங்கெட்டான் குடும்பம் நடத்துவோருமாக ஏராளம் இருக்கிறார்கள். இவர்களால்தான் நாடுகள் பலவற்றில் இன்று புதியதோர் தலைவலி உருவாயிருக்கிறது! தொழிலாளர்களின் நிலையிலுமில்லாது—முதலாளிகளின் நிலையிலுமில்லாது, இரண்டுக்கு மிடையில் அல்லாடும் இவர்களது நிலை பற்றி, எண்ணாதோர் கிடையாது இன்று. சிறு கம்பெனிக்குப் போனாலும், ஒரு மானேஜர், குமாஸ்தாக்களைக் காண்கிறோம்! பாங்கிக்குச் சென்றாலும் பலரை, ஏடும் பேனாவுமாக இருக்கக் காண்கிறோம்!! சர்க்கார் அலுவலகங்கள் பலவற்றில்—கூட்டம் கூட்டமாக, இருக்கிறார்கள்! பள்ளிக் கூடங்கள்—ரயில்கள்—மண்டிக் கடைகள் எங்கும், இந்த வர்க்கத்தினர்தான்!!! இவர்கள் அத்தனை பேருக்கும், மாதத்தின் 'முதல் தேதி' அல்லது என்று சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தேதிதான், கடவுள்! சதா, எதற்கெடுத்தாலும், இப்படிப்பட்ட மத்தியதரக் குடும்பங்களில், கூறப்படும் பதில். 'முதல் தேதி வரட்டும்!' என்பதுதான். ஒவ்வொருவரும் தத்தமது உழைப்புக்கான ஊதியம் அன்று கிடைக்கும் என்ற உறுதியில், ஒவ்வொருமாதத்தையும் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்குத் திடீரென்று விபத்து ஏற்பட்டாலோ அல்லது வேலை போனாலோ, அவனுடைய குடும்பம், புயலில் சிக்கிய சருகாகும்! பசியும் பட்டினியும் தலை தூக்கும்!! இருப்பதைக் கொண்டு சில நாட்கள் நகரும்-மனைவியின் காதுகளிலும், குழந்தைகளின் கைகளிலும் இருக்கும் நகைகள்-மார்வாடியிடம் செல்லும்.

⁕

இந்த மூக்குத்திருகும், தாலிச்சரடும், போன பிறகு குடும்பம், ரணகளமாகும்! யாழினிது குழலினிது என்றுரேவள்ளுவர்-அந்தக் குழந்தைகள், 'குட்டிச்சாத்தான்'களாவர் !! இல்லாள், பொல்லாள் ஆவாள்!!! விபத்து, வளரும். இது, சகஜம்— சராசரி, தினசரி, நடந்துகொண்டிருக்கிறது. இதனால் தான், இது போன்ற மத்தியதர குடும்பத்திலிருப்போருக்கு, இப்போது ஆங்காங்கு நடைபெறும், "கிராஸ் வேர்ட்ஸ்", "பருந்து நிறுப் போட்டி" முதலியவைகளில் ஒரு ஆசை உண்டாகி, லட்சக்கணக்கில் பணம் உருண்டு கொண்டிருக்கிறது. எப்படியாவது நாலுகாசு கிடைக்கவேண்டும், நாமும் நாலுபேரைப் போல வாழ வேண்டும் என்கிற ஆசைக்கும்—பிறர் எள்ளி நகையாடாதவகையில் அந்தப் பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமே என்கிற அச்சத்துக்கு மிடையே, ஊசலாடியபடி, காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்!!

இப்படிப்பட்ட மத்தியதர வர்க்கத்தை— சில ஆண்டுகளுக்கு முன் வரை கம்யூனிஸ்டுகள் அலட்சியம் செய்தார்கள்.

காங்கிரஸ்காரர்கள், இப்படியொரு வர்க்கம் முளைத்து வருகிறது என்பதைப் பற்றியே எண்ணியதில்லை.

எனினும், இன்று, எல்லோரையும் போலவே கம்யூனிஸ்டுகளும் எண்ணி, பேசுகின்றனர்! 'காரல்மார்க்ஸ், எழுதிய நூல்களில் இந்த வர்க்கம் பற்றிய வரிகள் இல்லை எனினும் கூட, இப்போது 'மத்தியதர வர்க்கத்தைத் திரட்டவேண்டும்!' என்று முழக்கமிடுகிறார்கள்.

சின்னாட்களுக்கு முன்பு டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் கூட இந்த மத்தியதர வர்க்கம் பற்றி, மாநில கமிட்டிகளுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறதாம்,

"மத்தியதர மக்களை அணுகி அவர்களை காங்கிரசுக்குள் கொண்டு வாருங்கள். அவர்களது பிரச்னைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முயற்சியுங்கள்"

டில்லி தாக்கீதின் கருத்து இது! மத்தியதர மக்களின் பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளும்படி தன்னுடைய கட்சியினருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது! இந்தத் தீர்மானம் இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்தைக் கூட அவரே கொண்டுவந்தும் இருக்கலாம். ஏனெனில் காங்கிரசில் அவர் வைத்ததுதானே சட்டம்! மத்தியதர மக்களின் துயர் களையும் நினைப்பு உருவானதே, மகிழ்ச்சிக் குரிய காரியம்தான். இப்படிப்பட்ட முக்கிய விஷயத்தில்' கவனம் செலுத்த பண்டிதர் முனைவது பாராட்டுக்குரியதே!

ஆனால், நாட்டில் நாம் காண்பதென்ன? காங்கிரஸ் தலைமை, கட்டளையிடுகிறது, கட்சியினருக்கு! காங்கிரஸ் அரசு...? அது தான் சிந்தையில் விந்தை மழையைப் பெய்கிறது!! கடந்த 23-ந் தேதி நாட்டின் நாலு பகுதிகளிலும் ஆயிரக்கணக்கானோர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்- "நீதி கொடு!" எனும் அட்டைகளைக் கையிலேந்தி வீதி வலம் வந்திருக்கிறார்கள். அவர்கள் யாவரும் ஆலைத் தொழிலாளர்களல்ல! மத்தியதர வர்க்கத்தினர்! முதல் தேதி நோக்கி வாழ்வோர்! பாங்கிச்சிப்பந்திகள்!!

காங்கிரஸ் அரசின் தகாத போக்கினைக் கண்டித்து, ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களது நியாயமான உரிமையில் கைவைக்கக் கூடாது என்று வாதாடி, அது ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தால், தொழிலாளர் மந்திரியாகப் பதவி வகித்த தோழர் வி. வி. கிரி ராஜினாமா செய்திருக்கிறார்!! சாதாரண விஷயமல்ல, இது. அரசுத் தலைமையின் போக்கைக் கண்டித்து அமைச்சர்,

விலகுகிருர்! "நாம் காட்டும் போக்கு நல்லதல்ல. மக்களுக்குக் கேடு செய்வது, இந்தப் பாதை காங்கிரஸ்காரர்களாகிய நமக்கு ஏற்றதல்ல!," என்று கூறி தோழர் கிரி விலகியிருக்கிருர்.

பாங்கிச் சிப்பந்திகளின் பிரச்னைகளைப் பற்றி அரசால் அமைக்கப்பட்ட 'தொழில் கோர்ட்டு' ஒரு தீர்ப்பு வழங்கியது. சிப்பந்திகளின் சம்பளம், வேலை நிலை, முதலியவைகளைப் பற்றி அதில் குறிப்பிட்டிருந்தது! அரசின் கடமை, தான் நிறுவிய 'தொழில் கோர்ட்டின்' தீர்ப்பை நிறைவேற்ற வேண்டியதாகும்! நீதியும் கடமையும் கொண்ட எந்த அரசும் அதைத்தான் செய்யும். ஆனுல், அந்தத் தீர்ப்புக்கு எதிராக, சில கருத்துக்களை நிதி அமைச்சர் தேஷ்முக் வெளியிட்டார்.. அதனுல், குழப்பம் ஏற்பட்டது. பண்டிதரும், நீதியை மறந்து, நிதியமைச்சரை 'தாஜா' செய்ய முயன்ருர்!! அதன் விளைவாகத் தொழில் கோர்ட் தீர்ப்பில், அரசு தலையிட்டு, சில மாறுதல்களைச் செய்தது கண்ட தோழர் கிரி, தன் வேலையை உதறினுர்! "கடமையினின்றும் தவறேன்! நீதிக்கு உகந்ததல்ல நமது போக்கு! உலகம் தூற்றும்! உள்ளம் உறுத்துகிறது என்னை!", என்றுகூறி நாட்டு அமைச்சர் பொறுப்பினின்றும் விலகியிருக்கிருர்!! அமைச்சர்களான பிறகு, அதனை இழக்காமல் பிடித்து வைக்கப் பாடுபடும் காங்கிரஸ்காரர்களில், கிரி ஒரு விதி விலக்காகியிருக்கிருர்! நீதிக்காக, தன் பொறுப்பை உதறித்தள்ளியிருக்கிருர்!! அவர் தான் தொழில் மந்திரி—அரசின் போக்கு அவருக்கே பிடிக்கவில்லை. பண்டித நேருவின் பாதை, அவரையே வெம்பச் செய்திருக்கிறது! வேதனையுடன், விலகிக் கொண்டிருக்கிருர்!! தன்னுடைய நீண்ட காலசகாவின் விலக்லைப்பற்றிப் பண்டிதநேரு சிறிதும் கவலை கொள்ளவில்லை—அவர் விலகும் பிரச்னை, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி அக்கரை கொள்ளவில்லை—. ராஜினுமாவை ஏற்றுக்கொண்டு, புதிய மந்திரியையும் நியமனம் செய்துவிட்டார்!!

இது அரசில்! ஆனுல் கட்சியின் சார்பில் கட்டளை செல்லுகிறது காங்கிரஸ் கமிட்டிகளுக்கு — மத்தியதர மக்களின் பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று!!

30—9—54 மித்திரன் ஏட்டில் வந்த விளம்பரங்கள், இவை:-

* பலஅடமானதார்களின்பொறுப்பில் சென்னை 17. தேவிசந்த்தோகா உத்திரவின்படி பொன், வெள்ளிநகைகள் 8—10—54 அன்று சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு இந்தியன் பண்ட்ஸ் லிமிடெட் அவர்களால் ஏலத்தில் விற்கப்படும்,

* பல அடமானதார்களின் பொறுப்பில் திருத்தணி சகன்மல்கீசுலால் சுரானு உத்திரவின்படி பொன் வெள்ளி நகைகள் 9—10—54 அன்று மேற்படி இந்தியன் பண்ட்ஸ் லிமிடெட்டால் ஏலம் போடப்படும்.

* பல அடமானதார்களின் பொறுப்பில் சென்னை புதுப்பேட்டை எம். கே. சாம்பாலால் உத்திரவின்படி 10-10-54 அன்று மேற்படி லிமிடெட்டால் ஏலம் விடப்படும்.

* பல அடமானதார்களின் பொறுப்பில் சென்னை சூளை கே. ஜேத்மல் சௌகார் உத்திரவின்படி பொன், வெள்ளி நகைகள் 8—10—54 அன்று மேற்படி இந்தியன் பண்ட்ஸால் ஏலம் விடப்படும்.

* பல அடமானதார்களின் பொறுப்பில் புவனகிரி எம். ஜே. கணேஷ்மல் சௌகார் உத்திரவுப்படி. வெள்ளி தங்க நகைகள் 10—10—54 அன்று கோவிந்தப்ப நாயக்கன் தெரு ஜி. எம். ஆக்வுனியர் அவர்களால் ஏலம் போடப்படும்.

* பல அடமானதார்களின் பொறுப்பில் பல்லாவரம் மோகன்ராஜ் சௌகார் உத்திரவின்படி பொன், வெள்ளி நகைகள் 12-10-54 அன்று இந்தியன் பண்ட்ஸ் லிமிடெட்டால் ஏலம் போடப்படும்.

ஒருநாள், விளம்பரம் இது! இவ்வண்ணம் ஏலத்தில் போகும் பொன், வெள்ளி நகைகள் — ஏழை தொழிலாளர்களுடையதல்ல; மாளிகைச் சீமான்களுடையதல்ல; மத்தியதர வர்க்க மக்களுடையதுதான்!! ஏல விளம்பரம், 'முதல் தேதி நோக்கி' களின் நிலைமையை விளக்குகிறது. இன்று நேற்றல்ல, ஒரு நாள் இரு நாளல்ல, எப்போதும் இப்படி நடந்து கொண்டுதானிருக்கிறது! இந்த மத்தியதர மக்களை நம்பித்தான் 'சேட்டுகளின்' கொள்ளைக் கிடங்குகள், நாட்டில் மலிந்திருக்கின்றன!!

இருக்கும் ஒன்றிரண்டையும் இழந்து தவிக்கும் நிலையில் மத்தியதர வாழ்க்கையினர் தவித்துக்கொண்டிருக்கிருர்கள் — அவர்களுக்கு மறுமலர்ச்சி வழங்க முடியாவிட்டாலும் 'தொழில் கோர்ட்,' மத்தியதர மக்களின் ஒரு பிரிவினரான பாங்கு சிப்பந்திகளின் பிரச்னையில், சில யோசனைகளை கூறுகிறது. அரசோ, அந்த யோசனைகளை ஏற்காமல், 15000 பேருக்கு சீட்டுக் கிழிப்போம்! சம்பளத்தையும் குறைப்போம்!! என்று சட்டம் செய்கிறது. அதே நேரத்தில், அவர்களது பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கட்சியினருக்குக் கட்டளை யிடுகிறது!!

23-ந் தேதியன்று, பாங்கு சிப்பந்திகள் வீதிகளிலே வலம் வந்தார்கள் என்ருல், அந்த நிகழ்ச்சியினைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது, எவரும்—முன்பு என். ஜி. ஓக்கள் இப்படிப் போர்க் கோலம் பூண்ட போதும், போலீசார் உரிமைப்போர் துவக்கிய போதும், அடக்கு முறைகளை வீசி அரசுமடக்கியது அவர்களை—அதைப் போல, எப்போதும் செய்திடலாம்! என்னசெய்துவிடமுடியும்இவர்களால்! என்று, இலேசாக எண்ணலாம்,அரசு. அதே நேரத்தில் கட்சியின் மூலம் அவர்களது பிரச்னையில் கவனம் செலுத்துவதாகக் காட்டிக் கொள்ளவும் முயலலாம். தன்னுடைய 'ஜோதி' சுடர்விட்டு எரிவதால் இதனை சுலபத்தில் சாதிக்க முடியும் என்றும் பண்டிதர் கருதலாம்!!

ஆனுல், அவரை எச்சரிக்கிருேம். மத்தியதரவர்க்கம், இன்று ஏதோ, இப்படி திடமான முடிவு எடுக்க முடியாமல் திண்டாடினுலும், அவர்களது குறைகள் களையப்படாமலிருப்பது பெரும் பெரும் ஆபத்தாகும்! நாட்டில், அவர்கள்தான் அதிகம்!! "தேவைக்கேற்ற ஊதியம்; சக்திக்கேற்ற உழைப்பு," என்கிற நிலை வர நாள் பல ஆனுலும், அன்ருட பிரச்னைகளைச் சமாளிக்கும் வகையில், அரசு ஏதாவது செய்யத்தான் வேண்டும். பண்டிதர் ஆட்சிக்கு அந்த மனப்பண்பில்லை! கட்சிச் சப்த மூலம், உண்மைக்குத் திரைபோட முயல்கிருரேயொழிய, நல்லது செய்ய வேண்டுமெனும் எண்ணமில்லை — இந்த அரசு வாழும் வரையில், என்பதை மத்தியதர மக்கள் சிந்திக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு அவர்களுக்காக எவ்வித காரியங்களையும் மேற்கொள்ள தி, மு. க. தயங்காது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிருேம்.

★

கவிதைக்குயில் மறைவு

தித்திக்கும் தமிழில், தெள்ளத் தெளிந்த கருத்தில், முத்து முத்தான வரிகளைத் தந்து மகிழ்வித்த நாஞ்சில் ஒளி, கவிமணி தேசிக விநாயகம் அவர்களை, தமிழகம் இழந்துவிட்டது என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிருேம்.

எதுகைமோனைச் சண்டைகளிலும், சமயவாதக் குழப்பங்களிலும், கவிதை புனைவோர் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த நிலைமாறி, கவிதைகள் மக்களின் மனப் பண்புகளை வளர்க்கும் வகையில் மலர வேண்டும்!— என்கிற நம்பிக்கை கொண்டிருந்த கவிஞர்களில் அவரும் ஒருவர். நல்ல உள்ளமும், அடக்கமான சுபாவமும், அன்புக் குணமும் கொண்ட 'கிழவர்' அவர்! தள்ளாத வயதிலும் தமிழ் மீதும், தமிழகத்தின் மீதும் அவருக்கிருந்த பற்று, கொஞ்சமல்ல!! அண்மையில்

நடைபெற்ற நாஞ்சில் உரிமைப் போருக்கும் தன்னுடைய 'வாழ்த்தை' வழங்கியிருந்தார்.

அவர் பல 'விஷயங்களைப்' பற்றிக் கவிதைகள் எழுதியிருக்கிறார்— ஆராய்ச்சி நூலும் தந்திருக்கிறார்— பொதுப் பிரச்னை பற்றிய கருத்துக்களையும் எழுதியிருக்கிறார். புத்தரின் பொன்னொளியினை விளக்கும் வகையிலும், குழந்தைச் செல்வங்களின் உள்ளத்தைக் கவரும் சின்னஞ்சிறு கவிதைகள் மூலமும், சாகாத நிலை பெற்ற நல்லதோர்பணியினைச் செய்திருக்கிறார். அத்தைய ஒரு தமிழ்க் குயிலை, அரசு, எப்போதோ கௌரவித்திருக்கவேண்டும்! செய்யவில்லை!! யார் யாருக்கோ பொன்னுடை போர்த்தியதே அன்றி அந்த 'முதுகிழவருக்கு', ஏதும் செய்யவில்லை.

அவருடைய மறைவு கேட்டு மலையாள முதலமைச்சர் பட்டம் தாணு, 'நீண்டதோர் அறிக்கை விட்டு தன்னுடைய வருத்தத்தை வெளியிட்டிருப்பதைக் காணும்போது, கவிமணியின் தமிழ்ப் பாடல், பிறமொழியினரின் உள்ளங்களையும் வளைத்திருக்கிறது என்பது விளங்கும். அத்தகைய அருமணியை இழந்த தாயகம், வருந்துகிறது! தன்னுடைய அன்பு மரியாதையையும், நன்றியையும் காட்டிக் கொள்கிறது!! அவர் மறைந்த அதே நாளில் 'சிருங்கேரி' எனும் சிங்கார மடத்தின் 'குரு' மறைந்தாராம்! அந்த மறைவு கேட்ட உடன் டில்லித் தலைவர் பிரசாத்திடமிருந்து, வருத்தமும் அனுதாபமும், பெரிய அறிக்கையாக வந்திருக்கிறது!! ஆனால் நமது கவிமணியின் மறைவு கேட்டு...? நாமும், தமிழகமும் தான், கலங்குகிறோம்!

கவிமணி, சராசரி காலத்தைவிட அதிக நாள் வாழ்ந்தவர். தன்னுடைய எழுத்துக்கள் மூலம், மக்கள் மனதில், சாகாத இடம் பெற்றுவிட்டவர். அவர் போய்விட்டார் எனினும் அவரது கவிதைகளும் கருத்துக்களும் என்றும் நம்மிடையே இருக்கும்! அவைகளை எண்ணி துயரினை மறப்போம்!! வாழ்க, கவிமணியின் புகழ்!!★

பூமியின் மடியில்!

மாலை வேளைகளையும் ஓய்வு நேரங்களையும் வீணாக்காது, அறிவை வளர்க்கும் அரும்பணியில் ஈடுபடுவது இளைக்கழகத் தோழர்களின் உற்சாகமான பொழுது போக்காகும். அவ்வகையில், சொற்பயிற்சி மன்றம் ஒன்றை நிறுவி, அறிவு வாதங்களை நடத்திக் கொண்டுவரும் பல கழகங்களில் ஒன்று பேராவூரணிக் கிளை. "உலகநாடுகளின் விபரம் தருக!," என்று அம்மன்றத்தினர் எழுதினர். விளக்கம், பலருக்கும் பயன்படலாம் எனக்கருதி, இதோ தந்துள்ளோம்! அறிவுவிளக்கம் பெறும் கேள்விகளுக்கு, அவ்வப்போது பதில்தர முயல்வோம்.

•

அன்டோரா
மக்கள் தொகை 6000
பரப்பு 191 ச. மைல்
ஸ்பெயின் - பிரெஞ்சு எல்லையிலிருப்பது.

அபிசீனியா
ம. தொ, 1.1 கோடி
பரப்பு 3,50,000 ச. மைல்
வடகிழக்கு ஆப்பிரிக்காவிலிருப்பது

அயர்லாந்து
ம. தொ. 29.8 லட்சம்
பரப்பு 26,601 ச.மைல்
பிரிட்டிஷ் தீவுகளில் ஒன்று

அர்ஜென்டினு
ம. தொ. 141 லட்சம்.
பரப்பு 10,79,964 ச. மை.
தென் அமெரிக்கக் குடியரசுகளில் ஒன்று

அரேபியா
பரப்பு 9,27,000

அல்பேனியா
ம. தொ. 11·75 லட்சம்
பரப்பு 10,629 ச. மைல்
கிரீசுக்கு வடமேற்கே

அல்ஸ்டர்
ம. தொ. 13 லட்சம்
பரப்பு 5,237 ச. மைல்
அயர்லாந்தின் வட பகுதியிலுள்ளது.

ஆப்கானிஸ்தானம்
ம. தொ. 1·2 கோடி.
பரப்பு 2,50,000 ச. மைல்
பாகிஸ்தானுக்கு வடமேற்கிலிருப்பது.

ஆஸ்டிரியா
ம. தொ. 69·19 லட்சம்
பரப்பு 32,000 ச. மைல்
மத்திய ஐரோப்பாவிலிருப்பது.

ஆஸ்திரேலியா
ம. தொ. 81·2 லட்சம்
பரப்பு 29,74,581 ச. மை.

இதாலி
ம. தொ. 465 லட்சம்
பரப்பு 1,93,000 ச. மை.

இந்தோனேஷியா
ம. தொ. 7·2 லட்சம்
பரப்பு 2,18,400 ச. மைல்

இந்தோசீனு
ம. தொ. 10·8 கோடி
பரப்பு 2,87,000 ச. மைல்

இராக்
ம. தொ. 49·50 லட்சம்
பரப்பு 1,16,000 ச. மைல்

இரான்
ம. தொ. 170 லட்சம்
பரப்பு 6,28,000 ச. மைல்

இலங்கை
ம. தொ. 66·34 லட்சம்
பரப்பு 25,322 ச. மைல்

இஸ்ரேல்
ம. தொ. 157 லட்சம்
பரப்பு 5000 ச. மைல்

ஈக்வடார்
ம. தொ. 34·4 லட்சம்
பரப்பு 2,26,000 ச. மைல்
தென் அமெரிக்காவின் மேல் கரைக் குடியரசு

உருகுவே
ம. தொ. 23·53 லட்சம்
பரப்பு 72,180 ச. மைல்
தென் அமெரிக்காவின் மிகச் சிறிய குடியரசு

எகிப்து
ம. தொ. 200 லட்சம்
பரப்பு 3,86,000 ச. மைல்

ஏமென்
ம. தொ. 35 லட்சம்
பரப்பு 74,000 ச. மைல்

ஐஸ்லந்து
ம. தொ. 14 லட்சம்
பரப்பு 40,5000 ச. மைல்

கனடா
ம. தொ. 140 லட்சம்
பரப்பு 38·58 லட்சம் ச. மைல்

கியூபா
ம. தொ. 53·48 லட்சம்
பரப்பு 44,178 ச. மைல்

கிரீஸ்
ம. தொ. 79·6 லட்சம்
பரப்பு 50,247 ச. மைல்

குவாடிமாலா
ம. தொ. 37 லட்சம்
பரப்பு 45452 ச. மைல்
மத்திய அமெரிக்க குடியரசு

கொரியா
ம. தொ. 290 லட்சம்
பரப்பு 85,225

கொலம்பியா
ம. தொ. 112·6 லட்சம்
பரப்பு 4,61,606 ச. மைல்

கோஸ்டாரிகா
ம. தொ. 8 லட்சம்
பரப்பு 23,000 ச. மைல்

சிலி
ம. தொ. 60·32 லட்சம்
பரப்பு 2,90,000 ச. மைல்

சீனு
ம. தொ. 46· 34 கோடி.
பரப்பு 4314,830

சுவிட்ஸலாந்து
ம. தொ. 47 லட்சம்
பரப்பு 15,950 ச. மைல்

செக்கோஸ்லேவேகியா
ம. தொ. 125 லட்சம்
பரப்பு 49,373 ச. மைல்

டாமினிகன் ரிபப்ளிக்
ம. தொ. 21·2 லட்சம்
பரப்பு 19,300 ச. மைல்
மேற்கிந்தியத் தீவுகளின் கிழக்குப் பகுதியில் உள்ளது

டுனீஷியா
ம. தொ. 26 லட்சம்
பரப்பு 45,000 ச. மைல்
வட ஆப்பிரிக்காவில் உள்ள அரபு நாடு.

டென்மார்க்
ம. தொ. 42·7 லட்சம்
பரப்பு 16,576 ச. மைல்

துருக்கி
ம. தொ. 209 லட்சம்
பரப்பு 2,94,502 ச. மைல்
ஆசியாவிலும், ஐரோப்பாவிலுமாக உள்ள நாடு.

தென்ஆப்பிரிக்கயூனியன்
ம. தொ. 123 லட்சம்
பரப்பு 7,90,219 ச. மைல்

நார்வே
ம. தொ. 32·65 லட்சம்
பரப்பு 1, 24, 556 ச. மைல்

நிகராகுவா
ம. தொ. 11·6 லட்சம்
பரப்பு 51,660 ச. மைல்
மத்ய அமெரிக்க குடியரசு.

நியூஜிலந்து
ம. தொ. 20·2 லட்சம்
பரப்பு 1,03,416 ச. மைல்

நேபாளம்
ம. தொ. 69·1 லட்சம்
பரப்பு 54,000 ச. மைல்

பர்மா
ம. தொ. 180 லட்சம்
பரப்பு 2, 54, 493 ச. மைல்

பராகுவே
ம. தொ. 14·06 லட்சம்
பரப்பு 61,600 ச. மைல்

பல்கேரியா
ம. தொ. 71·6 லட்சம்
பரப்பு 43,000 ச. மைல்

பனாமா
ம. தொ. 7·5 லட்சம்.
பரப்பு 31,890 ச. மைல்

பாகிஸ்தான்
ம. தொ. 10 கோடி

பிரான்ஸ்
ம. தொ. 4·24 கோடி
பரப்பு 2,12,895 ச. மைல்

பிரிட்டன்
ம. தொ. 5·06 கோடி
பரப்பு 93,997 ச. மைல்

பிரேசில்
ம. தொ. 5·21 கோடி
பரப்பு 32,98,870 ச. மை.
தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நாடு

பிலிபைன்ஸ்
ம. தொ. 195 லட்சம்
பரப்பு 1,14,834 ச. மை.
(7,090 தீவுகளைக்கொண்டது)

பின்லாந்து
ம. தொ. 40·64 லட்சம்
பரப்பு 1,30,162 ச. மை.

பெல்ஜியம்
ம. தொ. 86·39 லட்சம்
பரப்பு 11,750 ச. மைல்

பெரு
ம. தொ. 84 லட்சம்
பரப்பு 5,32,600 ச. மைல்
தென் அமெரிக்க மேல்கரை நாடு

பொலிவியா
ம. தொ. 40 லட்சம்
பரப்பு 4,15,000 ச. மை.

போர்ச்சுகல்
ம. தொ. 86 லட்சம்
பரப்பு 34,500 ச. மைல்

போலந்து
ம. தொ. 252 லட்சம்
பரப்பு 1,20,000 ச. மை.

மங்கோலியா
ம. தொ. 30 லட்சம்
பரப்பு 15,00,000 ச. சை

மலேயா பெடரேஷன்
ம. தொ. 52 லட்சம்
பரப்பு 50,680 ச. மைல்.

மெக்ஸிகோ
ம. தொ. 256 லட்சம்
பரப்பு 7,58,000 ச. மை.

மொராக்கோ
ம. தொ. 90 லட்சம்
பரப்பு 1,73,150 ச. மை.
ஆப்பிரிக்காவின் வட மேற்கு கோடி நாடு

மொனகோ
ம. தொ. 25,000
பரப்பு 799 ச. மைல்

யுனைடெட் ஸ்டேட்ஸ்
ம. தொ. 16 கோடி
பரப்பு 30,22,387 ச. மை.
48 ஸ்டேட்டுகளைக் கொண்டது.

யூகோஸ்லாவியா
ம. தொ. 160 லட்சம்
பரப்பு 96,265 ச. மைல்

ரஷ்யா
ம. தொ. 19·7 கோடி
பரப்பு 87·08 ல. ச. மை.

டர்க்மெனிஸ்தான்
ம. தொ. 12·5 லட்சம்
பரப்பு 1,89,370 ச. மை.

உஸ்பெகிஸ்தான்
ம. தொ. 62·8 லட்சம்
பரப்பு 159,170 ச. மை.

டாஜிகிஸ்தான்
ம. தொ. 15 லட்சம்
பரப்பு 55,700 ச. மைல்

கஸாகிஸ்தான்
ம. தொ. 61·5 லட்சம்
பரப்பு 10,72,000 ச. மை.

கிர்கிஸ்தான்
ம. தொ. 14·6 லட்சம்
பரப்பு 10,72,000 ச. மை.

ருமேனியா
ம. தொ. 160 லட்சம்
பரப்பு 91,934

லக்ஸம்பர்க்
ம. தொ. 2·9 லட்சம்
பரப்பு 999 ச. மைல்

லிச்டென்ஸ்டீன்
ம. தொ. 13,000
பரப்பு 60 ச. மைல்
ஜர்மன் சமஸ்தானம்.

லிபியா
ம. தொ. 9 லட்சம்
பரப்பு 6.79 லட்சம் ச. மைல்
வட ஆப்பிரிக்காவில் உள்ளது.

லெபனன்
ம. தொ. 12·8 லட்சம்
பரப்பு 4·300 ச. மைல்
மத்யதரைக் கடலோர நாடு

லைபீரியா
ம. தொ. 25 லட்சம்
பரப்பு 43,000 ச. மைல்
மேற்கு ஆப்ரிக்க நாடு.

வாடிகன்ஸிடி
ம. தொ. 1,000
பரப்பு 108 ஏகர்
ரோம் நகரில் போப் ஆண்டவரின் ஆட்சியில் உள்ள இடம்.

வெனிஸூலா:
ம. தொ. 47 லட்சம்.
பரப்பு 3,63,728 ச. மைல்

ஜப்பான்
ம. தொ. 8·33 கோடி
பரப்பு. 147,600 ச. மைல்

ஜோர்டன்
ம. தொ. 14 லட்சம்
பரப்பு 37,090 ச. மைல்
அரபு நாடு.

ஜெர்மனி
ம. தொ. 4·76 கோடி
பரப்பு 96,000 ச. மைல்

ஹங்கேரி
ம. தொ. 92 லட்சம்
பரப்பு 36,000 ச. மைல்

ஹாண்டுராஸ்
ம. தொ. 15 லட்சம்
பரப்பு 44,411 ச. மைல்
மத்ய அமெரிக்கக் குடியரசு.

ஹெய்டி
ம. தொ. 37 லட்சம்
பரப்பு 10,204 ச. மைல்
மேற்கிந்திய தீவுகளிலுள்ளது.

ஸ்பெயின்
ம. தொ. 283 லட்சம்
பரப்பு 1,96,700 ச. மைல்

ஸ்வீடன்
ம. தொ. 70 லட்சம்
பரப்பு 1,73,436 ச. மைல்

ஸயாம்
ம. தொ. 183 லட்சம்
பரப்பு 1,98,247 ச. மை.

ஸால்வடார்
ம. தொ. 21 லட்சம்
பரப்பு 13,176 ச. மை.

ஸான்மரினோ
ம. தொ. 16,000
பரப்பு 38 ச. மை.
இதாலியின் கிழ் கரையிலுள்ளது

ஸிரியா
ம. தொ. 32 லட்சம்
பரப்பு 55,700 ச. மைல்

மால்டிவ் குடியரசு
ம. தொ. 93,000
பரப்பு 115 ச. மைல்
இலங்கைக்கு தென் மேற்கிலுள்ளது. 12,000 சிறு தீவுகளின் கூட்டம்.

இவைகள் யாவும் தனியாக வாழும்போது ஆறு கோடி மக்களைக் கொண்ட நாம், தனியாட்சி நடத்த முடியாதா? சிந்திப்பீர்!

★

டில்லி தர்பார், பார்! பார்!!

"சுத்த மோசம்"

"ஏன், இது தெரியவில்லை?"

"வாங்கிய பணத்துக்கும் செலவுக்கும் கணக்கிருக்க வேண்டாமா!"

"இது என்ன அக்கிரமம்!"

"பொறுப்பான ஒரு அதிகாரியின் மூலம் ரூ. 10000 வீணாகியிருக்கிறதே! இது போல், வீணான தொகை எவ்வளவோ?"

டில்லி தர்பார், மக்களின் வரிப் பணத்தை எப்படியெல்லாம் விரயமாக்குகிறது என்பதை, அடிக்கடி வரும் பல செய்திகள், விளக்கி வருகின்றன.

டில்லியின் பொதுச் செலவுகளைப்பற்றி ஆராய பார்லிமெண்டு ஒரு கணக்குக் கமிட்டியை நியமனம் செய்திருந்தது. அக்கமிட்டியின் அறிக்கை, அண்மையில் வெளிவந்திருக்கிறது. முழு அறிக்கையையும் காணும் வாய்ப்பு நமக்கில்லை! எனினும், முடை நாற்றம் தாங்காததால், பல தடைகளையும் மீறி சில செய்திகள் ஏடுகளில் வெளிவந்துள்ளன. அவைகளில், சில:

முன் தூதராயிருந்த கிருஷ்ணமேனன், நேருவின் மடியில் உட்கார்ந்திருக்கிறார், அகில உலக அரசியல் மேதையெனப் புகழ்ப்படுகிறார்! இன்னொரு காங்கிரஸ் தியாகி பி. ஜி. கெர், என்பவர் உடல் நலமில்லையென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்!!

*

இன்னும் ஏராளமான கண்டன வாசகங்கள் தென்படுகின்றன! சந்தைமடமாக ஆக்கியிருக்கிறாரே வானொலியையும் திரைப்படத்தையும், அந்த கேஸ்காரின் இலாகாவுக்குத்தான் இத்தனை 'புகழ்மாலையும்!'

அவருடைய 'விளம்பர பிரச்சார இலாகா' செலவழித்துவரும் பணத்துக்கு கணக்கே வைப்பதில்லையாம்! அதிலும், பணம் தண்ணிபோல் ஓடக்கூடிய 'திரைப்பட செய்தி இலாகா' இருக்கிறதே—அதுபற்றி எவ்வித வரவு செலவுமே இல்லையாம்!! அந்த இலாகாவுக்கென பல 'குமாஸ்தாக்களை' கணக்கெழுதுவதற்கென நியமிக்கும்படி தெரிவித்தும், பல இடங்கள் காலியாக இருந்தும், இதுவரை ஒரு குமாஸ்தாகூட நியமிக்கப்படவில்லையாம்! கணக்கு எழுதவேண்டிய அவசியமிருந்தால்தானே, குமாஸ்தாக்கள் தேவை!! அதனாற்போலும், யாரும் நியமிக்கப்படவில்லை.

இதனைக் குறிப்பிட்ட 'கணக்குக் கமிட்டி' மிகவும் காரசாரமாகக் கண்டித்திருக்கிறது. 'உடனடியாக இப்போதுமுதல் ஒழுங்காக கணக்கு இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்போது முதல் ......! சரி!! இதுவரை, அழிந்த பணம் — யாருடையது? அதற்குக் காரணமான அமைச்சருக்கு என்ன தண்டனை அளிப்பது?—இது எதுவும் தெரியவில்லை!

கணக்கு வழக்குகூட இல்லாமல் நடைபெறும் மந்திரி இலாகாவை எங்காவது கண்டிருக்கமுடியுமா? இதோ இருக்கிறது—சுயராஜ்ய மணம் வீசும் பாரத பூமியில்! ஐயோ இத்தகைய ஊதாரிகளா நம்மை ஆளவேண்டும்? ஒரு பெட்டிக் கடைக்காரருக்கிருக்கும் 'புத்தி' கூட இல்லையே! மக்கள் பணம் என்றால், அவ்வளவு அலட்சியமா? இப்படித்தானா ஏழைகளின் சொத்து அழியவேண்டும்!

*

ரசாயன உரபேர வழக்கு என்று ஒன்று நடைபெற்று வருகின்றதல்லவா, டில்லியில்! அது சம்பந்தமாக சாமி எனும் மிகப் பெரிய அதிகாரி ஒருவர் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறாரல்லவா? அந்த ஊழலில், அவர்மட்டுமல்ல, பொறுப்பான பலருக்கும் பங்கு உண்டு என்று கணக்குக் கமிட்டி கண்டுபிடித்திருக்கிறது! அவர்கள்:- லண்டன் ஹை கமிஷனர், அவரது அலுவலக அதிகாரிகள்.

ரசாயன உரம், கருவிகள் ஆகியவைகளை வாங்குவதற்காக இந்தியாவின் சார்பில் **90** லட்சம் பவுனுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டதாம்! ஆர்டர் பெற்ற கம்பெனியின் பெயர் சென்பாங்க்ஸ் **லிமிடெட்!!** அந்தக் கம்பெனியின் மொத்த மூலதனம் ஒரே ஒரு ஆயிரம் பவுன்தானாம்!!! ஆயிரம் பவுனுள்ள ஒரு கம்பெனிக்கு லட்சம்—அதுவும் 90 லட்சம் பவுனுக்கு — 'ஆர்டர்' கொடுக்கப்பட்டு, "அரோகரா" ஆயிற்றாம்!!!!

இந்தப் பெரும் மோசடிக்கு முழுப் பொறுப்பும், இந்திய தூதராகத்தானே யிருக்கவேண்டும்? அவர்கள் இப்போது எங்கேயிருக்கிறார்கள்!

*

டில்லி மேல் சபையில், பூபேஷ் குப்தா எனும் கம்யூனிஸ்டு மெம்பர் ஒருவர் கேட்டாராம்— "பண்டித நேரு அவர்களே! ஏழை இந்தியாவின் பணம் இப்படித்தானா வீணாக வேண்டும்? வெளி நாடுகளில் பொங்கி வழிந்து வீணாகிறதே— நியாயமா!", என்று. அதுகேட்ட பண்டிதர், படபடவெனப் பேசவே, மேல் சபையில் ஒரே குழப்பம் கூச்சலும் உண்டாகி, கடைசியில் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலையிட நேர்ந்ததாம்!! பண்டிதர், "இப்படியெல்லாம் கூறுதே! எங்களுக்குப் பொறுப்பில்லையா?" என்றாராம். அந்தப் பொறுப்பின் அழகுக்கு 'கணக்குக் கமிட்டி' இதோ, ஒரு சர்டிபிகேட் தருகிறது!!

இந்தோசீனாவில், இந்தியப் பிரதிநிதியாகயிருந்தவர், நாணயச் செலாவணி வழியில் ஏராளமான பணத்தை விரயம் செய்துவிட்டாராம்!! அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறது, கமிட்டி. அந்தத் தூதருக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? திருப்பி அழைத்து, சம்பளத்தைக் குறைத்து, மீண்டும் டில்லியிலேயே வேலைக்கு வைத்துக் கொண்டார்கள்!

எப்படியிருக்கிறது, பாரதத்தின் இலட்சணம்? ஆசிய ஜோதி என்றும், அகில உலகப் புகழ் என்றும் ஆர்ப்பரிக்கும் காங்கிரஸ்காரர்களையே கேட்கிறோம்? என்ன சொல்லுகிறீர்கள் பதில்! ஏழையின் பணம் இப்படியாபோகவேண்டும்? எந்தக் காரியத்துக்கும் 'பணம் இல்லை! பணம் இல்லை!' என்று சொல்லுகிறோமே— பணம், எங்கே போய்வழிகிறது! ஏன்! ஏன், இக்கதி!!

21. ஆரம்ப விசாரணை

[ஆலை முதலாளி உத்தமநாதர், அவர் மகன் பாஸ்கர், மகள் புஷ்பா இவர்களிடையே மாட்டிக்கொண்டு அவதிக்கானானவன் ஆறுமுகம். 'உத்தமநாதபுரம்' என்ற பெரிய பெயர் கொண்ட சேரியில் ஏழ்மையோடு போராடிக் கொண்டிருந்த ஆறுமுகம் உத்தமநாதர் பங்களாவில் டிரைவராக அமர்ந்தான். அவன் வேலை ஏற்றுக்கொண்ட அன்றே ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டான்.

கல்லூரியில் படித்தபோதிலும், பணத்திமிர் அத்தனையும் கொண்ட பாஸ்கர்; புரட்சிக் கருத்துகள் பேசுவது ஒரு புது நாகரீகம் என்று புதுமை உலகில் நுழைந்து, தொழிற்சங்க தலைவன் நல்லமுத்துவைக் கைப்பிடித்த புஷ்பா; பணம் படைத்தோரின் அக்கிரமச் செயலில் ஈடுபடும் உத்தமநாதர். இந்த மூவருக்கும் கார் ஓட்டிஞன் ஆறுமுகம்.

உத்தமநாதரின் எதிர்பாரத மறைவு, அவன் மனதைக் கலக்கியது. ஏமாளித்தனமாக, சவமான உத்தமநாதரைப் புதைத்து, பின் சரியானபடி போலிஸில் மாட்டிக்கொண்டான்!]

★

பேரிரைச்சலோடு மலையிலிருந்து விழுந்தோடிவரும் காட்டாறு தன் சங்கமக் கட்டத்தை அடைந்து விட்டது!

ஆறுமுகத்தின் வாழ்வின் அந்திய காலமும் நெருங்கிவிட்டது. உலகத்தில் அவன் பயணம் விரைவில் முடிந்துவிடும். இனிமேல் அவனுக்கு இரவு பகல் கிடையாது. சில மணிநேரங்கள் தான். அந்தநேரமும் நிமிஷத்திற்குநிமிஷம்குறைந்து கொண்டே சென்றது. விநடிக்கு விநடி அவன் உடல் தூக்கு மரத்தினருகில் சென்று கொண்டிருந்தது.

சென்ற இரண்டு நாட்களாக அவனுக்கு, இருந்த பயம், மாச்சரியம், திகில் எல்லாம் எங்கோ ஓடிவிட்டது. இப்பொழுது அவனுக்கு யாரைக்கண்டும், எதற்கும் பயம் தோன்றவில்லை.

சரியானபடி அகப்பட்டுக் கொண்டுவிட்டான்! இனிமேல் யாருக்கும் பயந்து என்ன பலன்? யாரையும் வெறுத்துத்தான் என்ன லாபம்? எல்லாம் ஒன்றுதான். அவன் சரியானபடி சிக்கிக்கொண்டான். வருவதை அநுபவிக்க வேண்டியதுதான்.

இந்த மனோ நிலையில்தான் ஆறுமுகம் லாரியில் பயணம் செய்து கொண்டிருந்தான். போலீஸ்காரர்கள் அவனை ஒவ்வொரு ஸ்டேஷனுக்காக இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தனர். ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் அவனை விதவிதமான கேள்விகள் கேட்டனர். சில போலீஸ்காரர்கள் அவன் முதுகைப்பதம் பார்த்தனர். கன்னத்தில் அறைந்தனர். கழுத்தை நெரித்தனர். காலால் உதைத்தனர். ஆனாலும் ஆறுமுகம் வாயைத் திறக்கவில்லை.

சில போலிஸ்காரர்கள் அவனை அன்போடு அணுகிப் பார்த்தனர். பிடிக் கட்டை அவன் கையில் கொடுத்துவிட்டு "என்னண்ணே! விஷயத்தைக் கொஞ்சம் விளக்கமா சொல்லேன்!" என்று தோளில் தட்டிக் கேட்டனர், அப்பொழுதும் ஆறுமுகம் பேச மறுத்துவிட்டான். இல்லை, அவன் மனோநிலை அவனை பேச அநுமதிக்கவில்லை. மௌன சாமியாக அவர்களை முறைத்துப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான்.

அவனை அடித்தாலும், உதைத்தாலும் அவர்களிடம் அவன் முரண்டவே இல்லை. பேசாமல் அவர்கள் செய்வதையெல்லாம் சகித்துக் கொண்டான். அவர்கள் கூப்பிடும் இடங்களுக்கெல்லாம் போய்க்கொண்டே இருந்தான். அவனுடைய மௌனம் சில போலிஸ்காரர்களுக்கு இன்னும் கோபத்தை உண்டாக்கியது. அதனால் கிடைக்கும் அதிக அடியையும் பரிதாபமுகத்தோடு தாங்கிக்கொண்டான்.

கடைசியாக மாலை ஆறு மணிக்கு போலிஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்துக் கொண்டுவரப்பட்டு, அங்கேயே இருந்த அறையொன்றில் வைக்கப்பட்டான்.

போலிஸ்காரன் ஒருவன் ஒரு தட்டில் சாப்பாடுகொண்டுவந்து வைத்தான். ஆனால் ஆறுமுகத்திற்கு சாப்பாட்டைக் கண்டாலே எரிச்சலாக இருந்தது. வெறும் தண்ணீரை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்த பலகையிலேயே படுத்துக்கொண்டான். வெளியே இருந்து போலிஸ்காரர்கள் அவனைக் காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

அவனுடைய மனம் குழம்பி, ஒரே புகைமண்டலமாக இருந்தது. அதிலே திரும்பத் திரும்ப புஷ்பா, உத்தமநாதர், பாஸ்கர், நல்லமுத்து நால்வரும் வந்து வந்து மறைந்து கொண்டிருந்தனர். முதல் நாள், பாக்யபவனத்து கண்ணாடியில் தோன்றிய அவன் தோற்றம் இன்னும் பயங்கரமாக இடை இடையே தோன்றியது. தான் இருக்கும் நிலைக்கு, தான் செய்த காரியங்கள் எவ்வளவு கொடூரமானவை என்பதை நினைக்கும் போதே அவனையுமறியாமல் அவனுக்கு, அவன் மேலேயேவெறுப்புவந்தது.சேச்சே! நாம் ஏன் பிறந்தோம்? பிறந்தும்ஏன் பாக்ய பவனத்தில் நுழைந்தோம்?

நம் அறிவு இவ்வளவு காலியாக இருப்பதேன்? உத்தமநாதரை ஏன் புதைக்கவேண்டும்? அப்போதே பாஸ்கரையும், புஷ்பாவையும் கூப்பிட்டு, இறந்தவரின் உடலைக் காண்பித்திருக்கக்கூடாதா? இதிலே எதற்காக நல்லமுத்துவை இழுத்துவிடவேண்டும்?" இப்படி சரமாரியாக அவன் மனதில் கேள்விகள் எழும்பியவண்ணமிருந்தன. ஒவ்வொரு தடவையும் தன் தவறை நினைத்துப்பார்க்கும் பொழுது, வருத்தம் அதிகமாகியது. அவன் பேரிலேயே அவனுக்கு வெறுப்பு அதிகமாகியது. கோபம் நெஞ்சையடைத்தது.

இதை யெல்லாவற்றையும் விட இன்னும் இரண்டொரு நாட்களில் நடக்கப்போகும் சம்பவம் அவனை இன்னும் பயமுறுத்தியது.

ஆம்! இன்னும் இரண்டொரு நாட்களில் அவனை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவார்கள்; அவன் செய்த கொடுஞ்செயலுக்கு அவனுக்குத் தண்டனை வழங்கப்படும். தூக்குமேடைக்கு அனுப்பப்படுவான்!

இதுதான் அவன் வாழ்க்கையின் முடிவா? வேறென்ன இருக்க முடியும்? வருங்காலத்தில்முழுநம்பிக்கையோடு நான்கு நாட்களுக்கு முன் தான் கார் டிரைவராக நுழைந்தான். ஆனால் இன்னும் இரண்டு, நாட்களில் தூக்குமரத்தின் வழியாக அவன் வெளியேற்றப்படுவான். அவன் சென்ற வாழ்க்கைப் பாதை அவனை முடிவில் தூக்குமரத்தில் கொண்டுபோய் முடித்திருக்கிறது! இதுதான் அவனுக்கு அமைந்த பாதையா?

'சாவு' என்றால் யாருக்கும் பயம் தானே வருகிறது. அதுவும் ஆறுமுகத்திற்கு ஏற்பட்ட ஏமாற்றம், அந்தப்பயத்தை இரட்டிப்பாக்கியது. வானத்திலிருந்து விழும் நட்சத்திரக் கதிர்கள் பூமிக்கருகில் வருவதற்குள் மறைந்து விடும். அது போல்தான் ஆறுமுகத்தின் வாழ்வும்! திடீர் என்று தோன்றி மறையும் மின்னலாகி விட்டது!

திரும்பத் திரும்ப தூக்குமரம் அவன் கண் முன்னால் தோன்றியது. சாவுக்கு நாள் குறித்த பின் வாழ்க்கை இவ்வளவு கஷ்டமாக இருக்குமென்று அவன் எப்படி அதற்கு முன் சிந்தித்திருக்க முடியும்? அந்த மனவேதனையை அவனால் தாங்க முடியவில்லை. பிதற்றிய வண்ணமே புரண்டு புரண்டு படுத்துக் கிடந்தான்.

மறுநாள் அவன் விழித்துப்பார்க்கும் பொழுது, அவனருகில் இரு போலிஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

"தூங்கினது போதுமப்பா. எழுந்திரு, போகலாம்!" என்றனர்.

ஆறுமுகம் எழுந்தான். ஆனால் அடுத்த வினாடியே கீழே விழுந்து விட்டான். அவனால் நிற்க முடியவில்லை. கால்கள் சத்தற்றுப்போயிருந்தன. தலையெல்லாம் கனத்துப் போயிருந்தது. கண்களில் லேசாக தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

"வாப்பா......" என்று விழுந்த அவனை பிடித்துத் தூக்கினர் போலிஸார். அவர்கள் பலத்திலேயே எழுந்து நடந்தான். கமிஷனர் அலுவலகத்திலேயே மற்றொரு கட்டிடத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர். கோர்ட்டுக்குத்தான் அழைத்துச் செல்கின்றனர் என்று எண்ணிக் கொண்டே போனான் ஆறுமுகம். ஆனால் அங்கேசென்றவுடன் அவன்கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

பெரிய ஹாலிற்குள் அவனை அழைத்துச் சென்றனர். அங்கே நடுவில் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் உட்கார்ந்திருந்தார். அவருடைய இடது பக்கத்திலே பாஸ்கர் அமர்ந்திருந்தார். பின்னால் மானேஜர் சாம்பசிவம் நின்று கொண்டிருந்தார். சுற்றி நாலைந்து போலிஸ் இன்ஸ்பெக்டர்கள் நின்றுகொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அவன் உள்ளே நுழைந்ததும் எல்லோரும் அவனையே உற்றுப் பார்த்தனர். இது நீதிமன்றமாக இருக்கமுடியாது; இல்லையேல் அங்கே இப்படித் தாறுமாறாக உட்கார்ந்துகொண்டு எல்லோரும் புகை பிடித்துக்கொண்டா இருப்பார்கள் என்று தோன்றியது ஆறுமுகத்திற்கு. ஹாலில் நுழைந்து நடுவில் செல்லச் செல்ல, ஆதிமூலமும் பாஸ்கரும் அவன் கண்ணில் பட்டனர். அவர்கள் அருகில் செல்லச் செல்ல அவனுக்கு பயம் வந்தது. அவனால் கட்டுப்படுத்த முடியாத திகிலுணர்ச்சி, அவன் இருதயத்தை வந்து தாக்கியது. கால்கள் நடுங்கின. கண்கள் இருண்டன. பழையபடி அப்படியே சாய்ந்தான்!

அதற்குள் கூடவந்த இரு போலிஸ்காரர்களும் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டனர். மற்றொரு போலிஸ், ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டான். அதிலே ஆறுமுகத்தை உட்கார வைத்தனர்.

ஆறுமுகம் மறுபடியும் கண்ணைத் திறந்தபோது, ஆதிமூலம் கையில் ஒரு கிளாஸ் தண்ணீரை வைத்துக்கொண்டு அவனருகில் நின்றுகொண்டிருந்தார்.

"கொஞ்சம் தண்ணீர் குடி, ஆறுமுகம்."

ஆறுமுகம் பேசாமல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"இதோ, டீ வந்து விட்டது. இதையாவது குடி!" என்றார் மறுபடியும்.

ஆறுமுகம் பழையபடி சும்மாவே இருந்தான். என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை. பாஸ்கரைப் பார்த்தவுடன் உத்தமநாதரின் ஞாபகம்தான் வந்தது. உத்தமநாதரிடமிருந்து பொன்னியின்மேல் நினைவு மாறியது. அவளைப்பற்றிய எண்ணம் வந்தவுடன் அவனையறியாமலேயே அவனுக்கு தூக்கி வாரிப்போட்டது. உத்தமநாதருடைய கொலைக் குற்றமாவது சாட்சிகளோடு நிரூபிக்கவேண்டியது. பொன்னியைக் கொலை செய்த பொழுது போலிஸாரே அவனைப் பிடித்து இருக்கின்றனரே!

பெருமூச்சும், அழுகையும் சேர்ந்து வந்தது ஆறுமுகத்திற்கு. சில நிமிஷங்களில் அப்படியே மறுபடியும் மயக்கமாகிவிட்டான்.

"சரி, சரி, இவனைக் கொண்டு போய் மறுபடியும் லாக் அப்பிலே போடுங்கோ. விழித்தவுடன் அவன் எது கேட்கிறானோ, அதைக் கொடுத்து, அவனைக் கொஞ்சம் தெம்பு பண்ணுங்கோடா!" என்று உத்தரவிட்டுவிட்டு பாஸ்கரை அழைத்துக்கொண்டு வெளியேறினார், ஆதிமூலம்.

ஆறுமுகம் மறுபடியும் பழைய அறைக்குக் கொண்டுவரப்பட்டான்.

மறுபடியும் அவன் விழித்துப் பார்க்கும்போது மாலை ஆறுமணியாகி இருந்தது. முதல்நாள் காலை சாப்பிட்ட இட்லிதான். அதற்குப் பிறகு வெறும் தண்ணீரைச் சாப்பிட்டு விட்டே இதுவரை காலங் கடத்திஇருக்கிறான். இப்பொழுதோ

அடக்க முடியாத பசியெடுத்தது. உடலெல்லாம் அலுத்து வந்தது. கையை ஊன்றியவண்ணம் எழுந்து உட்கார்ந்தான்.

அவன் எழுந்ததைப் பார்த்தவுடன் உடை போடாத போலீஸ்காரன் ஒருவன் உள்ளே ஓடிவந்தான்.

"என்ன ஆறுமுகம் எழுந்துட்டியா? சாப்பாடு கொண்டு வரச் சொல்லட்டுமா?" என்று கூறிக்கொண்டே அவனருகில் வந்து அமர்ந்தான்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை.

"நீ யார்........?" என்று இழுத்தான்.

"நான் யாராயிருந்தால் என்ன? முதலில் நீ சாப்பிடு!" என்று கூறிக்கொண்டே அங்கு மற்றொரு போலீஸ்காரனால் கொண்டுவரப்பட்ட சாப்பாட்டை அவன் முன் வைத்தான். சாப்பாட்டைவிட முக்கியமான விஷயம் வேறொன்று இருந்தது ஆறுமுகத்திற்கு.

"சாப்பாட்டைத் தவிர வேறொன்றும் இங்கு தரமாட்டார்களா?" என்று இழுத்தான் ஆறுமுகம்.

"வேறென்ன வேண்டும்......?"

"இன்றைய பத்திரிகை!"

"பத்திரிகையா? செய்தித்தாள் கூடப் படிக்கிறவனா நீ? அதனாலென்ன, இதோ சாப்பிடு!" வாங்கிவரச் சொல்கிறேன் என்றான் அந்த உடையில்லாத போலீஸ்காரன். ஆறுமுகம்மௌனமாக சாப்பிட ஆரம்பித்தான்.

சிறிது நேரத்தில் 'தினமித்திரன்' ஒன்றை கொண்டுவந்து கொடுத்துவிட்டு போனான், போலீஸ்காரன் ஒருவன்.

"சரியா, சாப்பிட்டியா......இந்தா இதைப் படிச்சிட்டு பத்திரமா என்னிடம் கொடுத்திடு. இன்ஸ்பெக்டர் வரும்போது படிச்சுகிட்டே இருக்காதே. அவர் என்னைத்தான் கோபித்துக்கொள்வார்!" என்றுகூறிவிட்டு அந்தப் போலிஸும் போய்விட்டான்.

பாதி சாப்பாட்டை அப்படியே நிறுத்திவிட்டுப் பத்திரிகையை ஆவலோடு புரட்டினான், ஆறுமுகம்.

"போலிஸ் விசாரணையில் ஆறுமுகம் மயக்கமுற்றான்!"

"உத்தமநாதர் கொலை வழக்கு நாளை நீதிமன்றம் ஏறுகிறது."

என்று முதல் பக்கத்திலேயே கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டிருந்த தலைப்பைக் கண்டவுடன்தான் ஆறுமுகத்திற்கு அன்று காலை நடந்தது, போலீஸார் நடத்திய 'ஆரம்ப விசாரணை' என்று தெரிந்தது. ஆரம்ப விசாரணையிலே அவன் மயக்கமுற்று விழுந்து விட்டிருக்கிறான்! சாப்பாட்டை அப்படியே வைத்துவிட்டு பத்திரிகையின் உள்ளே படிக்க ஆரம்பித்தான்.

"ஆரம்ப விசாரணைக்காக இன்று போலீஸ் கமிஷனரின் முன்பாக கொண்டுவரப்பட்ட கொலைகார ஆதித்திராவிட ஆறுமுகம், தான் கொலை செய்த உத்தமநாதரின் மகன் பாஸ்கரையும், அவனை சரியானபடி மடக்கிப் பிடித்த இன்ஸ்பெக்டர் ஆதிமூலத்தையும் கண்டவுடன் மயக்கமுற்று விழுந்துவிட்டான். உடனே கமிஷனர் ஆபீசுக்கு டாக்டர் வரவழைக்கப்பட்டார். இரண்டு நாட்களாய் ஏதும் உண்ணாத காரணத்தினால்தான் அவன் மயக்கமுற்றான் என்று கூறி ஒரு ஊசி போட்டுவிட்டுச் சென்றார், டாக்டர்."

நேற்று காலை பிடிபட்ட ஆறுமுகத்தைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் போலீஸ் கமிஷனரின் அலுவலகத்தின் முன்னிலையில் கூடியிருந்தனர்.

இன்று காலை சரியாக 10-30 மணிக்கு ஆறுமுகம் கமிஷனரின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அந்த நேரத்திலே அவனைப்பார்த்த சமூக சேவகி ஒருவர், "அவனுடைய முகம், பேய் ஒன்று இருப்பதற்கு சான்று!" என்றான். அந்தளவு கொடூரமான முகமும், ஒல்லியாக இருந்தாலும் முறுக்கேறிய உடலுடன் ஐந்தரை அடி உயரமிருக்கிறான், ஆறுமுகம். ஒரே கறுப்பாக, பரட்டைத் தலையுடன் குனிந்தபடி நடந்துபோனான்.

இரண்டுநாட்களாய் ஒன்றும்சாப்பிட மறுத்த காரணத்தால் போலிஸ் விசாரணைக்கு மிகப்பலஹீனமாகவந்த ஆறுமுகம், அங்கே ஏற்பட்ட அதிர்ச்சியில் மயக்கமாகி விழுந்துவிட்டான்.

நகரின்சேரிவாழ்வோர்சீர்திருத்த சங்கத்தின் காரியதரிசியும், சமூக சீர்திருத்த சங்கத்தலைவருமான மிஸ் கமலாட்சி இந்தசம்பவங்கள் பூராவையும் கவனித்தபின் கூறுகிறார், "எங்கள்நண்பர் உத்தமநாதரைக் கொலை செய்த ஆறுமுகத்தை இன்றுகாலை கமிஷனர் அலுவலகத்தில் பார்த்தேன். இந்தவழக்கு விபரம்பூராவும் இன்ஸ்பெக்டர் ஆதிமூலத்தின் வாயிலாகவே அறிந்துகொண்டேன். இதிலிருந்து எனக்குப்படுவது என்னவென்றால், உத்தமநாதர் கொலையுண்டதற்கு ஆறுமுகம் மாத்திரம் காரணமல்ல!

நாமும்தான்! ஆம், நாமும்தான்.

சேரியில் வாழ்பவர்களை நம்முடைய வீட்டிற்குள் ஏன் அழைத்து வருகிறோம். குடிசைக்குள் வாழ்வோர் அவர்களுக்குள்ள கலாசாரத்திலே வளர்கின்றனர். அவர்களை நம்முடைய சமுதாயத்திலே புகுத்திவிட்டால், இங்கே இருக்கும் நாகரீக வளர்ச்சியை, அவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அதனால் தான் கொலைகள் ஏற்படுகின்றன. அர்த்தமில்லாத விரோதங்கள் ஏற்படுகின்றன. ஆகவேதான் நாமும் குற்றவாளிகள் என்கிறேன்..

இவை ஏற்படக்கூடாதென்றால் என்ன செய்யவேண்டும்?

முதலில் குடிசை வாழ்வோர் மற்றவரோடு சேர்ந்து நிற்கவேண்டிய இடங்கள் குறைக்கப்பட வேண்டும்.

சினிமாக்கள், நாடகங்கள் முதலியன தனித் தனியான நாட்களில் தனித் தனியான காட்சிகளை காண்பிக்கவேண்டும். இரு வகுப்பாரும் ஒன்றாகப் பார்க்கலாம் என்றிருப்பதால்தான், உள்ளவனைப் பார்த்து இல்லாதவன் ஏக்கமடைந்து, கம்யூனிஸ்டுகளின் தூண்டுதலில் உள்ளவனைக் கொலை செய்யத் துணிகிறான்.

நம்முடைய நாட்டுப் பண்பின் அடிப்படையே 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதுதான். இதை நிலைநாட்ட வேண்டுமானால் குடிசை வாழ்வோருக்கு தனியான பள்ளிக்கூடம், பூங்கா, சினிமா, நாடகம், சாப்பாட்டு நிலையங்கள் எல்லாம் அமைத்துத் தரவேண்டும். நாளடைவில் அவர்கள் முன்னேறி, அவர்களும் நம் பாதையில் வருவர். அதுவரை அவர்கள் குழந்தைகளும், நம் குழந்தைகளும் ஒன்றாகப் பழகினால் நம் குழந்தைகள்தான் கெட்டுப்

போகும். ஏனென்றால் ஆறுமுகம் போன்றவர்கள்தான் அவர்களிலே அதிகம்!"

சேரி வாழ்வோரின் சீர்திருத்தத்தில் அக்கரைகொண்ட அங்க சேவகி எழுதியதை அதற்குமேல் அவனால் படிக்கமுடியவில்லை! குடிசையிலே பிறந்ததே பெருங் குற்றம்! அதற்குமேல் இரு கொலைகள் வேறு செய்திருக்கிறான். இனிமேல் அவனை யார் விடப்போகிறார்கள். 'தினமித்திரன்' இன்னும் நாலு புத்தி அவனைப்பற்றிய செய்தியையே பரப்பிருந்தது.

இனிமேல் படித்து என்ன பயன்? அதற்குமேல் சாப்பிடவும் அவனுக்கு விருப்பமில்லை. அப்படியே படுத்தான்.

சிறிது நேரத்தில் யாரோ 'ஆறுமுகம்!' என்று அவனை அன்பாகக் கூப்பிடுவது கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே 'நல்லமுத்து' நின்று கொண்டிருந்தான்!

(தொடரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லமுடியுமோ? இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே ஏற்றம் பெற்றதாம், அது! இந்துக்களின் புண்ய பூமியாம்!! என்னே, பெருமை! என்னே அருமை!", என்று எழுதுங்கள், இருப்பதைச் சொல்லாதீர்கள், முன்பு இருந்த ஏற்றத்தைப்பற்றி மட்டும் பேசுங்கள், என்றுதெரிவித்துள்ளார்.

அதற்கு அவர் போதித்துள்ள தத்துவம், 'பொறுமையே மனிதர்கள் பூணவேண்டிய பூணாரம்!', என்பது! இருக்கும் ஏழ்மையை மறைக்க எப்போதோ இருந்த புகழை எண்ணுங்கள் என்கிறார்! இந்தியாவின் குட்டுவெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் இவ்வண்ணம் கூறுகிறார்!! பண்டித நேரு ஆளும் நாடு எது தெரியுமோ? "பாசி படர்ந்த குட்டையை, புண்ய குளம் என்று சொல்லி, இலட்சக்கணக்கானோர் சென்று மூழ்கி வாழும்தேசம்! அழுக்குருவமானஒருமனிதரை, ஆண்டவரின் தூதர் என்று சொல்லி, அவர் காலில் மனிதர்கள் வீழ்ந்து கும்பிடுகின்ற கோணல் புத்திகொண்டோரின் கூடம்!!", என்று,அந்த எட்டாளர்கள் எழுதிவிடக்கூடாதேயென்கிற அச்சம்! 'ஆசிய ஜோதி' மங்கிவிடுமோ என்கிற பீதியின் விளைவால் தோன்றிய உபதேசம்,இது!! ஏனெனில், வெளிநாட்டிலிருந்து வந்து சென்ற மிஸ் மேயோ, பீவர்லி நிகோலஸ் போன்ற பெரிய எழுத்தாளர், இந்தியாவின் நிலையை, உலகெங்கும் சந்திசிரிக்க வைத்தார்கள்!! அப்போது அவர்கள் மீது சீறிப் பாய்ந்த பண்டிதர் குழாம், "என்ன செய்வது? ஓட்டைக் குடிசையும் ஒன்றரைச் சாண் பாயுமாக இந்திய மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம், அரசு எங்களிடம் இல்லாததுதான்! ஏழ்மையும் அறியாமையும் எங்கள் புண்ய பூமியை ஆட்டிப்படைக்கிறதென்றால், அதற்குக் காரணம், எங்கள் பாரதமாதாவின் கையிலும் காலிலும் விலங்கு பூட்டப்பட்டிருப்பதுதான்! எங்களுக்குமட்டும் சுயராஜ்யம் வரட்டும்—பிறகு பாருங்கள்", என்று, முழக்கமிட்டதுண்டு. இன்று, நடப்பது சுயராஜ்யம்! இருப்பதோ, பழைய நாற்றம்!! எட்டாளர்களோ, கண்முன்னே காண்கின்றனர் இந்த உண்மையை! கண்ட காட்சிகள் ஏடுகளில் வர ஆரம்பித்தால், என்ன எண்ணுவர் வெளிநாட்டார்! அதுவும் இந்தஆறேழு ஆண்டுகளில் இந்தியாவின் ஜோதியைப்பற்றி ஆங்காங்கும் பரப்பப்பட்டிருக்கும் செய்திகள் எவ்வளவு!! அதனால் தான், பொறுமையெனும் பூணாரத்தைப் போட்டுக்கொள்ளுமாறு சொல்லுகிறார், அந்த சகிப்புத்தன்மையே மனித குலத்தை 'உஜ்ஜீவிக்கும்' மார்க்கம் என்று வர்ணிக்கிறார்.

*

டில்லித் தலைவர், பண்டிதர் போக்கு இது! தன்னுடைய ஒளியைக் காப்பாற்றிக்கொள்ளும் அவசியத்திலிருப்பதால் அயல் நாட்டு எட்டுத் தூதர்களின் தாளடி பணிகிறார்!! ஆனால், அவரது நிலையிலில்லாத இங்குள்ள சிலரும், அவ்வண்ணமே பேசி வருவதைக் காண்கிறோம். முத்தமிழின் பெருமை! சிலம்புச் செல்வத்தின் அருமை! பூம்புகாரின் புகழ்! 'ஊரும் பேரும்' கொண்டுள்ள தொடர்பு!— இவ்வண்ணம், நம்மைப்போலவே, நாட்டின் சின்னங்களையும் ஏட்டின் ஒளிகளையும் எடுத்துப் பேசிவிட்டு, 'அரகர நமப்பார்வதிபதயே!' என்று கூறிவிட்டு, காரியம் முடிந்தது— காசு எவ்வளவு கிடைத்தது என்று கணக்குப் பார்த்துக்கொண்டு போகின்றனர். அந்தளவோடு போகின்றனரா, என்றால் இல்லை! பண்டிதர் எந்தளவுக்கு பழம் புகழைச் சுட்டிக்காட்டும் நம் மீது பாய்கிறாரோ அதே போல இவர்களும் பாய்கிறார்கள்— கண்டிக்கிறார்கள்.

ஏடுகளைத் தேடியெடுத்து ஏதேதோ சொல்லுகிறார்கள்.

இப்படியிருக்கவேண்டும்— அப்படியிருக்க வேண்டும், என்று கூறுகிறார்கள்.

புதியநிலை உண்டாக்கப் போகிறார்களாம் சாக்கடையாகிவிட்டதாம் நாடு— இவர்கள் சந்தனக் காடாக்கப் போகிறார்களாம்!!

எரிச்சலோடு, இவ்வண்ணம் பேசுகிறார்கள்— எரிச்சலுக்குக் காரணம், பழைய புகழைப்பற்றிப் பேசுவதோடு நின்றிடாமல், புகழ் புழுதிக்குள் புதைந்ததன் விளக்கத்தையும்— அப்புகழ் மீண்டும் கிடைக்கக் கூடிய மார்க்கத்தையும் நாம் காட்டுகிறோம் என்பதுதான். பழைமையை நினை! ஆனால், இப்போதுள்ள நாற்றத்தை மறக்கமட்டும் அந்த நறுமணத்தை எண்ணிக் கொள்!!—என்று போதிக்கிறார்கள். புதுமணம், ஏன் கூடாது?- பதில், கூறார்! பழைய மணம், ஏன் போயிற்று?— பேசார்! எனினும், 'பொறுமை'யோடு சகித்துக்கொள்ள வேண்டும், என்று கூறமட்டும் தயங்கார். சந்தர்ப்பம் வரும்போது' அந்த 'பொறுமை'யையும் மறந்து நம்மீது "பாணங்களை" வீசவும் கூசார்!! பல நாட்டு எழுத்தாளர்களிடம்'பொறுமை'யைப்பற்றிப் பேசிடும் பண்டிதர், இதுவரை நமக்கு வழங்கியிருக்கும் 'ஏச்சு மொழிகள்,' எவ்வளவு?அவர்களுக்குப் பொறுமை உபதேசம் புரியும் அவர் நமக்குத் தந்ததென்ன? அவர்கள் முன் அடிபணிகிறார்! ஏனெனில், அவர்கள் வெளி நாட்டார்! நம்மை, மிரட்டுகிறார்— காரணம், நாம் அவருடைய அடியில் கிடக்கிறோம். வெளி நாட்டினருக்கு வெண்சாமரம் வீசியாவது தமது 'ஜோதி'யைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கிற அளவுக்கு, உண்மை நிலையுணர்ந்து நாட்டை நறுமணக் காடாக்கும் நோக்கம் அவருக்கில்லை. ஏனெனில், அவர் ஒரு வானவில்! வர்ணஜாலம் காட்டி, மறைந்திடும் அளவில், அவரது அரசியல் பாதை மாறிவிட்டது— அது போன்ற 'வானவில்'கள், ஏராளம், இன்று!! அவர்கள் தான், இங்கும் தமிழைப்பேசு—புகழ்—ஆனால், குறைகளைக் கூறாதே— பழைய பெருமையைப்பேசு—எழுது—அதோடு, நின்றுகொள்-என்று கூறிய வண்ணம் நாட்டிலும் ஏட்டிலும் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய 'வானவில்'கள் ஏராளம் இருக்கிறார்கள் நாட்டில்! நாடும், அவர்கள் கையில் தான் ஆடிக்கொண்டிருக்கிறது!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" PreSs,
95, Tirukkachinambi St, Kancheepuram.